New
Science Academy
In Front of B M. C.
JAFFNA.
★ CHEMISTRY ★
By
செல்வரஞ்சன்
திங்கள், வெள்ளி - 6 30 a. m
தாக்கவியக்கவியல்
செவ், வியா - 6.30 a.m
அற்கின்
செவ், வியா - 5.00 p.m
அவத்தை சம நிலை

பக்கங்கள் பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
In Front of B. M. C.
JAFFNA.
★ PHYSICS ★
By
சோதிலிங்கம்
திங், வெள்ளி - 4 00 p.m.
சடப்பொருளியல்
செவ், வியாழன் - 4.00p m.
ஒட்டமின்னியல்
புதன் - 4 00 - 6 00 p.m
சடப்பொருளியல்
புதன் - 6 30 - 8.00 a. m
வெப்பவியல்

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ 25 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 12 (08 - 05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 80

# ஆசிரிய கலாசாலை மீண்டும் பலாலியில்

## லலித் உத்தரவிட்டிருப்பதாக ராஜமனோகரி உதயனுக்குத் தகவல்

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, மே 8

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மீண்டும் விரைவில் முந்திய இடத்தில் இயங்கத் தொடங்கும்.

பயிற்சிக் கல்லூரி கட்டடத்தில் தற்போது நிலைகொண்டுள்ள ஸ்ரீ லங்கா படையினரை அங்கிருந்து வேறு இடத்துக்கு அனுப்பவும்—

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி அமைச்சின் செயலாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இத்தகவலை துணை கல்வி அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் நேற்று கொழும்பில் வைத்து உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீண்டும் அதே இடத்தில் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கில் பலரிடமிருந்து தமக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும்——

அதை அடுத்து தாம் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் —துணை அமைச்சர் சொன்னார்.

தமது கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டு கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு இது தொடர்பான பணிப்புரைகளை விடுத்தார் என்றும் அவர் மேலும் உதயனுக்குத்தெரிவித்தார். [உ 2]

## குறிப்பிட்ட தினத்தில் வழங்க நடவடிக்கை

## ஒய்வூதியம் தாமதம் நீங்கும்

யாழ்ப்பாணம், மே 8

யாழ் மாவட்ட ஒய்வூதியக்காரர்களுக்கு குறிப்பிட்ட தினத்தில் ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஒய்வூதியத்துக்குப் பொறுப்பான பிரதிநிதிப் பணிப்பாளர் திரு. பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

ஒய்வூதியம் வழங்குவதற்கு மாதம் தோறும் குறிப்பிடப்படும் தினத்தில் யாழ்-மாவட்டத்தில் ஒய்வூதியம் வழங்கப்படுவதில்லை என்ற முறைப்பாட்டை அடுத்து யாழ்-செயலக பிரதம கணக்காளர் திரு. வி. இராமச்சந்திரனும், பிரதம எழுதுவினைஞர் திரு. சி. கந்தசாமியும் கொழும்பு சென்று பிரதிப் பணிப்பாளருடன் பேச்சு நடத்தினாார்கள்.

ஒய்வூதியம் தாமதமாவதற்கான காரணங்களைக் கேட்டறிந்த அவர் குறிப்பிட்ட தினத்தில் இனி ஒய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். [இ 3]

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு; குளறுபடிகளை ஆராய மாநாடு

### கொழும்பில் லலித் தலைமையில்

கொழும்பு, மே 8

நாடு முழுவதிலும் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களை தெரிவு செய்வதில் இடம்பெற்றதெனக் கூறப்படும் குளறுபடிகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளார். மாநாட்டுக்கு அவரே தலைமை வகிப்பார்

எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இந்த மாநாடு நடைபெறும்.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு சகல மாகாண, மாவட்ட கல்விப் பணிப்பாளர்களும் அழைக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வண்ணை காமாட்சி அம்மன் இன்று தேர்ப் பவனி

யாழ்ப்பணம், மே 8

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நச்சிமார் கோவில்) ரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி அம்பாள் விநாயகர், சுப்பிரமணியர் சமேதராக காலை 9-மணிக்கு தேரேறி ஆரோகணித்து பக்தர்களுக்கு காட்சி தருவாள்.

பிற்பகல் 3 மணிக்கு பச்சை சாத்தி சண்முக அர்ச்சனையுடன் அம்பாள் தேரால் கோவிலுக்கு எழுந்தருள்வாள்.

நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்

(சிறப்பிதழ் 4 ஆம், 5 ஆம் பக்கங்களில்) [ஓ-51]

## முச்சந்தி முரளி



பொலீஸார் போனது போல இராமண்ணாமாரும் போவினமோ... அப்பிடி எண்டால் இன்னும் நல்லதல்லோ... !

## விமானத்தில் தீ பற்றியது!

புதுடில்லி, மே 8

புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தில் நேற்றுச் சென்று இறங்கிய இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்றின் இடதுபக்க என்ஜின் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது.

தெய்வாதீனமாக விமானத்தில் அச்சமயம் இருந்த சுமார் 200பயணிகள்காயங்கள்இன்றி காப்பற்றப்பட்டனர். (ஓ-எ)

## நிவாரணம் வழங்க மேலும் 3 கோடி ரூபா வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்டத்தில் நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கென மேலும் 3 கோடி ரூபா நேற்று யாழ்.செயலகம் வந்து சேர்ந்தது.

உற்பத்தித் திறன் வாய்ந்த நிவாரணக் கொடுப்பனவு மற்றும் கடும் பாதிப்புக்குள்ளானோருக்கான கொடுப்பனவு ஆகியவற்றை வழங்கி முடிக்க 7½ கோடி ரூபா தேவையென அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்திருந்தார்.

அரச அதிபரின் கோரிக்கையை அடுத்தே 3 கோடி ரூபா வந்து சேர்ந்துள்ளது.

தேவையான மிகுதி நிதி அடுத்த வாரத்தில் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-3]

# சாம் தம்பிமுத்து - எம். பி. நேற்றுச் சுட்டுக் கொலை!

## மனைவி ஆபத்தான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, மே 8

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியுமான திரு. சாம் தம்பிமுத்து நேற்று நண்பகல் 1 20 மணியளவில் கொழும்பில் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொழும்பு கறுவாக்காட்டுப் பகுதியில் — கிரகரிஸ் சதுக்கத்தில்— கனடா தூதரகத்துக்கு அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்ற திருமதி கலா தம்பிமுத்து ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியின் 54ஆவது வார்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்வதற்காக விஸாபெற்றுக்கொள்வதற்கு கொழும்பில் உள்ள கனடா தூதரகத்துக்கு வந்தபோதே திரு. சாம் தம்பிமுத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகத் தெரியவருகிறது.

வீதியோரத்தில் நிறுத்தப்பட்ட காரில் ஏறுவதற்காகத் தமது மனைவியுடன் அவர் வந்தபோதே அவர்களை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளில்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது குற்றச்சாட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ் சுமத்துகிறது

கொழும்பு, மே 8

திரு. சாம் தம்பிமுத்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே காரணம் என்று ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சர்கள் திரு. கிருபாகரன், ஜனாப் அபுயூசுப், எம். பி. திரு யோகசங்கரி ஆகியோரும் விடுதலைப்புலிகளே இந்தக் கொலைச்சம்பவத்துக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளனர். (உ-2)

## தம்பிமுத்து கொலைக்கு அரசே முழுப் பொறுப்பு!

### யோகசங்கரி எம். பி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 8

திரு சாம் தம்பிமுத்துவின் கொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பேற்க வேண்டும். இத்தகைய ஒரு செயலை ஆரம்பத்திலேயே முறியடிக்கத் தவறிய அரசின் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

—ஈ பி. ஆர். எல். எவ் வைச் சேர்ந்த எம். பி திரு. யோகசங்கரி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு குற்றம் சுமத்தினார். அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இத்தகைய செயல்களைச் செய்யும் கொலை வெறியர்களை நாம் குறை கூற முடியாது. ஏனெனில் அவர்கள் கொலையிலேயே கவனமாக இருப்பார்கள். ஆனால் அரசு கொலை வெறியரிடமிருந்து எமக்கு பாதுகாப்பளிக்கதவறிவிட்டது இது மன்னிக்க முடியாத விடயம்

நாட்டில் சட்டம், ஒழுங்கை

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைப் பகுதியில் கடுங் காற்றுடன் மழை

### சூறாவளி அபாயம் நீங்கியது

யாழ்ப்பாணம், மே 8

பருத்தித்துறை மற்றும் வடமராட்சியின் பல பகுதிகளிலும் நேற்றுக் கடுங்காற்றுடன் கூடிய மழை பெய்தது

கடலில் அலைகள் மிக உயரமாக அடித்தன

இதேவேளை யாழ். குடாநாட்டைத் தாக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட சூறாவளி, அபாயம் நேற்று அதிகாலை அளவில் நீங்கியது

வங்களா விரிகுடாவிலிருந்து குடாநாட்டை நோக்கி வந்த தாழ் பவன அமுக்கம் – சூறாவளிப் பரிமாணம் – வேறு திசைக்கு நகர்ந்து செயலற்றுப் போனதாக அறிவிக்கப்பட்டது.

அதன் காரணமாக வடபகுதிக்குப் பெருமளவிலான சேத

(9ஆம் பக்கம் பார்க்க)

# சிங்களப் பொலீஸ் இடமாற்றம் அடுத்த சில தினங்களில் பூர்த்தி

## இன்னும் 10 பேர் உத்தரவுக்கு காத்திருக்கின்றனர்

யாழ்ப்பாணம், மே 8

அடுத்த சில தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து சகல சிங்களப் பொலீஸ்காரர்களும் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுவிடுவார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றிய 259 சிங்களப் பொலீஸ்காரர்களையும் தென்பகுதிக்கு கட்டம் கட்டமாக இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி கடந்த 26 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் 249 சிங்களப் பொலீஸார் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

பலாலி, யாழ். கோட்டை, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றிய பத்துப் பொலீஸ்காரர்கள் மட்டும் உத்தரவை எதிர்பார்த்து பலாலி இராணுவ முகாமில்

(9 ஆம் பக்சம் பார்க்க)

## அடகுநகை:

## மீளப் பெறத் தவறியோருக்கு மற்றும் ஒரு சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்டத்தில் மீளளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அடகு நகைகளில் 316 நகைகள் உரியவர்களினால் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. இவற்றைப் பெறத் தவறியவர்கள் வந்து பெற்றுக்கொள்ள எதிர்வரும் 11ஆம் திகதி மற்றொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது

மக்கள் வங்கியின் பிரதிப் பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். சிவசிதம்பரம் இதனைத் தெரிவித்தார்.

கடந்தவருடம் செப்டம்பர் மாதம்வரை பணம் செலுத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்டத்துக்கான ஒய்வூதியம் எதிர்வரும் 11 ஆம் திகதி வழங்கப்பட இருக்கிறது.

கொழும்பு சென்ற அதிகாரிகள் குழு நேற்று ஒய்வூதிய வவுச்சர்களையும், பணத்தையும் எடுத்துவந்து வங்கிகளுக்கு அனுப்பும் வேலைகள் நேற்று நடைபெற்றன. (இ-3)

## வடக்கு-கிழக்கு ஆசிரியர் இடமாற்றம்

## உடனடி இடமாற்றமில்லை; இந்தத் தவணை முடிவில்தான்

யாழ்ப்பாணம், மே. 8

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் மாவட்ட அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் உடனடியாக இப்போது கடமைபுரியும் மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள்.

ஆயினும் மாவட்டசேவைத் திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 5 வருட சேவையை பூர்த்தி செய்தவர்கள் யாழ். மாவட்டத்திற்கும், 4 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களை ஏனைய மாவட்டங்களுக்கும் 2 ஆம் தவணை முடிவில் இடமாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை முதன் முறையாகக் கூடிய வடக்கு-கிழக்கு மாகாண இடமாற்றச் சபைக் கூட்டத்தில் இப்படி முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களுக்கு சேவைக்காலம் கணக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழம் தேசிய அரசியல் சபையின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, மே 8

"ஈழம் தேசிய அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் மே 7 ஆம் திகதி நடைபெறும் என்று மார்ச் முதலாம்திகதி நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் நிர்ணய சபைக்கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்திவைக்க முடிவு செய்துள்ளோம்."

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைவர் என்று குறிப்பிட்டு திரு பொன். ராம். ராஜகாரியர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜகாரியர் அறிக்கை

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஈழம் தேசிய அரசியல்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

08-05-1990

செவ்வாய்க்கிழமைசித்திரை25

சுபநேரம்:

10-25 முதல் 11-55 வரை

இராகுகாலம்

02-55 முதல் 04-25 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## புங்குடுதீவு கண்ணகையம்மன் தேர் இன்று

யாழ்ப்பாணம், மே 8

புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) ரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 9- மணிக்கு வசந்த மண்டப பூஜை ஆரம்பமாகி அம்பாள் 11 - மணிக்கு தேரில் ஆரோகணித்து வீதியுலா வருவார்.

நாளை புதன்கிழமை தீர்த்த திருவிழா நடைபெறும்.

(சிறப்பிதழ் 8 ஆம் பக்கத்தில்) (ஓ 5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கிணற்றுடன் 1½ பரப்பு வெறும் காணியும் பக்கத்தில் கடை போடக் கூடிய 4 அறைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. சிதம்பரநாதன் (சேவையர்) கச்சாய் தெற்கு, கொடிகாமம் அல்லது ஆ. ஆறுமுகராசா, மரக்கறி வியாபாரி மாக்கற், சாவகச்சேரி.
(3431)

பற்பல வர்ணங்களில் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. ஸ்கிப்ஸ் அக்கூரியம் 37/6, ஸ்ரான்லி வீதி, (மஸ்கன்ஸ் கட்டிட அருகில்) யாழ்ப்பாணம்.
(3507)

கோவில் தேவைகட்கு உபயோகிக்க கூடிய 6 K.V.5K V 2K.Vமண்ணெண்ணெய்டீசல் (Single 3 Phase) ஜெனறேட்டர்களும் 11H P Air Cool Petter டீசல் என்ஜின் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- யூனிவேர்சல் சேல்ஸ், இல. 15, ஆடியபாத வீதி, கல்வியங்காடு. யாழ்ப்பாணம். (கல்வியங்காடு சந்தியிலிருந்து 100யார் தூரத்தில்)
(3436)

கோண்டாவில் டிப்போவிற்கு அண்மையில் 3பரப்புக் காணி சுற்றுமதில் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஐ. ராசு, கொக்குவில்மேற்கு, கொக்குவில்.
(3437)

ஹொண்டா CD 50 Chaly C 50 புதிய பதிவு செய்யப்படாதது. தொடர்பு:கு.சுதர்சன், இல. 9/6, மலர் மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். மாம்பழம் சந்திக்கு அருகில்
(13040)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர் தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர்(புத்தகசாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(3235)

### உணவுசேவை

உங்கள் நாளாந்த வைபவ ஓடர்களுக்கு (புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகைகள் சூப்வகைகள்) நாடவேண்டிய இடம் உங்களின் கிறில் - சைனீஸ்இன் இல 181, பலாலி வீதி, கோண்டாவில் பழைய இடத்தில் இருந்து. 200 மீற்றர் தொலைவில்.
(12999)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(பிலிமத்) கறுப்பு (வரி) சேவல் தனிச் சிவப்பு கறுப்பு சேவல், (LOHMAN)பிறவுண் சேவல்பிறவுண், கறுப்பு ,பேடு புறொயிலர் வான் கோழிக் குஞ்சுகள் 8ஆம், 9 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல, 9, கந்தையா லேன். சுன்னாகம் [புகையிரத நிலையத்திற்கு அருகில்)
(3437)

### சஞ்சிகைகள்

கலைக்கதிர், கலைமகள், ஞானபூமி. ரத்தின பாலா, குமுதம். கல்கி ஆனந்த விகடன், துக்ளக், பேசும்படம் பொம்மை, கல்கண்டு. இந்தியா டுடே.[தமிழ் ஆங்கிலம்] Time News week Sport Star Front Line மற்றும் சஞ்சிகைகள் அனைத்தும் சந்தா ஏற்றுக்கொள்கிறோம். இம்மாதம் முதல் சஞ்சிகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
[சி/4340]

### A/L Physics

பல் தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனம் பௌதீக இரசாயனமும் (G.C.E. A/L வகுப்புகளுக்குரியது) by ம. செல்வரத்தினம் B Sc இராஜேஸ்வரி மகேஸ்வரன்A/LPhysics பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கியது. விலை ரூபா 75/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி-4493)

### தவறிவிட்டது

மரத்தால் செய்யப்பட்ட யேசுவின் தலை உட்பட ஒரு பார்சல் தவறுதலாய் எடுத்துள்ளார்கள். எடுத்தவர் தயவுசெய்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(13114)

27- 04-90 வெள்ளிக்கிழமை வல்லை வெளியில் 29 ஸ்ரீ 7685 மினிபஸ்ஸில் இருந்து மேற்குறிப்பிட்ட இலக்க மினிபஸ்ஸின் பதிவுப் புத்தகம் காணாமல் போய் விட்டன. கண்டெடுத்தவர்கள் 750 மினிபஸ் காரியாலயத்திற்கு அறிவிக்கவும். முகவரி: ஆர். குணரட்ணம், மாறாம்புலம், அல்வாய் வடக்கு, அல்வாய்.
(3440)

## விற்பனைக்கு

பாவிக்கப்பட்ட கூரை ஓடுகள், தேக்கம் கதவுகள், யன்னல்கள் நிலைகள், மரங்கள் என்ன விற்பனைக்குண்டு. இவை மீண்டும் பாவிக்கப்படக்கூடிய நல்ல நிலையில் உள்ளன. தொடர்பு கொள்க:- N. சுரேந்திரன் இல. 46, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.சந்திக்கும் நேரம் காலை 9.00 மணிக்கும் 10 00 மணிக்கும் இடையில 12-05-90 முன் தொடர்பு கொள்க
(3520)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி.
**நவரத்தினராசா அருமைநாயகி**

தோற்றம்: 19 - 10 - 1957
மறைவு: 08 - 04 - 1990

8 - 5 - 1990 இல் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் சகல நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ச. நவரத்தினராசா.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(13022)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

I. A. B., BASIC, Spoken English
புதிய வகுப்புகள் 14 - 05 - 90 அன்று ஆரம்பமாகின்றன. விண்ணப்பிக்கவும்

**Further Education of Uduvil Girls College - Uduvil**
[சி-4378]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி மாணிக்கம் பாக்கியம்**

தோற்றம்: 01-04-1914
மறைவு: 19-04-1989


திதி: 08. 05. 1990

குடும்பத்தின் ஒளி விளக்கே! பாசத்தின்
பிறப்பிடமே! அயராது உழைத்து
எம்மையெல்லாம் உயரவைத்த
உத்தமியே! எங்களை எல்லாம் ஆழ்ந்த
துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்து
ஓராண்டு சென்றாலும் அம்மா உங்கள் நினைவுகள்
எம்மை விட்டகலாது.

உங்கள் பிரிவால் வாடும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''மாணிக்கம்''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[3374]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகமணி சிவஞானம்**

அன்னைமடியில்: 30 - 05 - 1944
இறைவன் அடியில்: 12 - 05 - 1987

முருகன் திருவருளே, எங்கள் அன்புச்செல்வமே, ஆண்டு மூன்றாயினும் ஆறாத்துயரில் நின்று மூழ்குகிறோம். மீண்டும் எங்களிடத்தில் திருவிளக்காய் மகிழ்ச்சியுடன் இனிதுடன் வாழ வருவீராக. இறைவனடிப்பாதத்தில் இறைஞ்சுகிறோம்.

சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
பெற்றோர், மனைவி, மகன்,
சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்.

புதுத்தோட்டம்,
தெல்லிப்பளை.
(3516)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**யோகசுந்தரம் ஐங்கரன் [ஜனா]**

ஆண்டவன் நமக்களிப்பு:- 30- 01- 1972
அநியாய உயிரழிப்பு:- 08- 05 - 1989

திதி:- 28- 04 1990

ஓடி மறைந்தது ஓராண்டு மகனே!
தேடி அலைகின்றோம் தினமும் உன் ஆவியை
மூடி மறைக்க முடியாத உன் நினைவை
பாடி மறைக்க முயல்கின்றோம் முடியவில்லை
ஆண்டொன்று சென்றபோதும் ஆறுதல் மனதிலில்லை
அருமையாய் வளர்த்திட்ட நம்
ஆண்மகன் கதையே சோகம்
அமைதியின் பெயரைச் சொல்லி
ஆர்ப்பரித்து வந்தார் இங்கு
மனித உயிர்களுக்குச் சற்றே
மதிப்பளிப்பார் என்றிருந்தோம்
மாறாக நடந்த கதை மனதைச்
சுட்டெரிக்குதையோ!

28- 04- 1990 சனிக்கிழமை அன்று நடைபெற்றஎமது மகனின் ஆண்டுத் திவச வைபவத்தில் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தும், மதிய உணவிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணன்மார்.

யோகஸ்தான்,
அளவெட்டி.
(3514)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**குழந்தைவேலு தாமோதரம்பிள்ளை**

தோற்றம்: 15 - 12 - 1911
மறைவு: 08 - 04 - 1990

திதி:-08 - 05 - 1990

வானத்து முழுநிலவாய் வந்தீர்- எங்கள்
வாழ்வுக்கு ஒளி தந்து நின்றீர்
மண்ணிலே புகழ் பரவி வாழ்ந்தீர் - இன்று
விண்ணிலே இறைவனடி சேர்ந்தீர்.
பிணியால் வருந்தியோர்க்கு மருந்தளித்தீர்
வயிற்றுப் பசியால் வாடியோர்க்கு உணவளித்தீர்
வீட்டுக்கு வந்தவர்க்கு விருந்தளித்தீர் - காலன் கேட்டு
வாசல் வந்த போது உயிர் கொடுத்தீர்
திங்கள் ஒன்று இன்று வந்து மறையுதையா-
தினம் எங்கள் உள்ளம் உன்நினைவால் நிறையுதையா
மாறி மாறி சுழன்றுவரும் வாழ்வுதானையா - இந்த
மாநிலத்தில் நிலைத்து நிற்பார் யார்தானையா

அன்னார் நோயுற்று ஆனைப்பந்தி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவருக்கு சிகிச்சையளித்த டாக்டர்களுக்கும் மற்றும் அன்னாரை நன்கு பராமரித்த சிரேஷ்ட தாதி, தாதிமார். சிற்றூழியர் முதலானோருக்கும் அன்னாரது மறைவுகேட்டு உடன் வந்து அனுதாபம் தெரிவித்து உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மரணச்சடங்கிலும் இறுதிக் கிரியைகளிலும் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'' சிவகுடில் ''
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
(3515)

## இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 8
நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவிலில் இன்று செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். (உ-7)

★ ★

யாழ்ப்பாணம், மே 8
வட்டுக்கோட்டை அடைக்கலத் தோட்டம் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

சென்ற 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவம் நாளை புதனன்று தீர்த்தத்துடன் நிறைவுறும். (ப)

★ ★

காங்கேசன்துறை, மே 8
வீமன்காமம் விணியவரை இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்இரதோற்சவம் இன்று நடைபெற இருக்கிறது.

காலை 5 மணிக்கு அபிடேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து தேரில் அம்மன் பவனி வருவார்.

விசேட மேளக்கச்சேரிகளும் இடம்பெறும்.
நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும். (ஓ-68)

## தமிழ்த் தாய் பதிப்பகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 8
''தமிழ்த் தாய் பதிப்பகம்'' திறப்பு விழா 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மின்சார நிலையவீதி, விமாகி மேல் மாடியில் நடைபெறும்.

எழுத்தாளர் திரு. தி. ச. வரதர் விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். (க)

## சர்வதேச செஞ்சிலுவை தினம் இன்று

இன்று மே 8 ஆம் திகதி உலக செஞ்சிலுவைச் சங்க செம்பிறைச் சங்க தினமாகும். ''மனித வாழ்வையும் கௌரவத்தையும் பாதுகாப்பது'' என்பது இந்த ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச் செம்பிறை இயக்கத்தின் கருப்பொருளாகும்.

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை இயக்கம் உலகின் 149 நாடுகளில் பரவி இருக்கிறது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 25 கோடியாகும். கடந்த 127 ஆண்டுகளாகச் செஞ்சிலுவைச் சங்கம் உலகம் முழுவதிலும் மனிதரின் துன்பத்தைத் தணிக்கப் பணியாற்றி வருகிறது. இயக்கத்தின் ஸ்தாபகரான ஹென்றி டுனான்ட் மே 8 ஆம் திகதி பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீப பூஜையும் பௌர்ணமி உற்சவமும்

கொக்குவில், மே 8
கொக்குவில் ஸ்ரீ சாயிதுர்க்காதேவி ஆலயத்தில் நாளை புதன்கிழமை தீப பூஜையும், பௌர்ணமி உற்சவமும் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளன.

சித்திரா பௌர்ணமி தினத்தையொட்டி நடைபெறும் இந்த உற்சவத்தில் விசேட அபிஷேகம், சுமங்கலிபூஜையும் தொடர்ந்து அம்பாள் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

பிற்பகல் 6. 00 மணியளவில் சின்னமணி குழுவினரின் ''நிலவு காட்டிய நீலாயதாட்சி எனும் பொருளில் வில்லிசையும், அளவையூர் என் கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும். [ஓ69]

## அதிபர் ஓய்வு பெற்றார்

வேலணை மே 5
வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் திரு. பொ. நடராசா இம்மாதம் 23ஆம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நாட்டின் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமை ஆற்றிய இவர் ஆசிரியப் பணியை தான் படித்த வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலேயே ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

**பொருள்:**
போர் செய்யும் கண்களை உடைய இவளுடைய பண்புகளை யான் மறந்தால் பிறகு நினைக்க முடியும்; ஆனால், ஒரு போதும் மறந்தது இல்லையே!

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
08 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

## வழிப்படுத்தல் வைத்தியம்

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் வைத்திய விசேட நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் கடமை நேரத்தில் தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது. இது விடயத்தில் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்களின் கண்காணிப்பு அவசியம் என்று சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தி இருக்கிறார்.

வைத்திய நிபுணர்கள், வழிப்படுத்தல் மூலம் தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்கும் விவகாரம் சிக்கல் நிறைந்த ஒன்று. வழிப்படுத்தல் முறை அமுலுக்குக் கொண்டுவரப்படுவதும், அடிக்கடி ரத்துச் செய்யப்படுவதும் அதன் முரண்பாடான தன்மைக்கு ஒரு சான்று. வழிப்படுத்தலால் நன்மையும் உண்டு, தீமைகளும் உண்டு. இரண்டில் எது அதிகம் என்பது குறித்து தேசிய மட்டத்தில் வாதப்பிரதிவாதங்கள் நடந்திருக்கின்றன

வாதம் என்று வந்தால் எந்த விடயத்திலும் இரு பக்கங்களுக்கும் சாதகமான, சார்பான கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால் நடைமுறையில் ஒருபக்கத்துக்கே தராசு இறங்கும். வழிப்படுத்தல் வைத்தியம் நடைமுறையில் நன்மைகளைவிட பாதிப்புகளையே அதிகம் செய்கிறது. நோயாளர்களுக்கு நன்மை செய்வதைவிட வைத்தியர்களுக்கு மேலதிக வருவாயைக் கொடுக்கும் முறை என்பதே மேலோங்கி நிற்கிறது.

கடமை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில், அரச வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளிக்க வசதி செய்வதே வழிப்படுத்தல் வைத்திய முறை. விசேட நிபுணர்களின் வைத்திய ஆலோசனை பெறுவதற்காக என்றே இது மிக முதலில் தொடங்கப்பட்டது. வைத்திய ஆலோசனை பெறும் நோயாளியை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும் என்று கருதினால் அங்கு வைத்துச் சிகிச்சை அளிப்பது என்பதே ஆரம்பமாக இருந்தது.

ஆனால் இப்போது பல நோயாளர்கள் ஒவ்வொரு முறையும் பணம் செலுத்தி, ஆஸ்பத்திரிக்கு வெளியே சிகிச்சை பெறும் அளவுக்கு வழிப்படுத்தல் வைத்தியம் "வளர்ந்துள்ளது"! பணம் செலுத்திக் காட்டும் போது இருக்கும் அக்கறை, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் இருப்பதில்லை என்ற வேதனைக்குரிய நிலை வந்துவிட்டது.

நண்பகல் 12-00 மணிக்கும் பிற்பகல் 3-00 மணிக்கிடையிலும் தனிப்பட்ட வைத்தியம் செய்ய வைத்தியர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்களில் பலரும் ஆஸ்பத்திரிக்கு வெளியே தனிப்பட்ட சிகிச்சை நிலையத்துக்குச் சென்றுவிட வேண்டும் என்ற மனக்கருத்துடன் பத்தரை மணியிலிருந்தே செயற்படுகிறார்கள். ஆஸ்பத்திரி நோயாளர்களுக்குரிய சிகிச்சைகளை அக்கறையின்றியும், அவசர அவசரமாகவும் செய்கிறார்கள். அதாவது எப்படியும் காலை 11-00 மணிக்குப் பிறகு அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர்கள் பலருக்கு உடல் அங்கும் உள்ளம் தனியார் சிகிச்சை நிலையத்திலும் தான் இருக்கிறது.

அவ்வாறு இருக்கும்போது ஆஸ்பத்திரியில் உரிய சிகிச்சை, அக்கறையான, வைத்திய பரிசீலனை (Diganosis) நடக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது? மாதச் சம்பளத்துக்காக ஆஸ்பத்திரியிலும், மேலதிக பணச் சம்பாதிப்புக்காக தனியார் வைத்தியசாலையிலும் என்ற நோக்குடனேயே இப்போது வைத்தியர்களின் சேவை நடக்கிறது.

தெய்வத்துக்கு அடுத்த படியில் வைத்து மதிக்கப்பட்ட வைத்தியர்கள், இப்போது தொழிலின் மகிமையையும், தமது மதிப்பையும் இழந்து விட்ட நிலையை உருவாக்கி இருக்கிறார்கள், தொழில் மகத்துவத்தை இன்னும் பேணும் வைத்தியர்கள் மிகச் சிலரே.

வைத்தியனின் சேவை மனிதாபிமானத்துடன், கருணையுடன் பரிவு நிறைந்த மனத்துடன், பரோபகார சிந்தையுடன் செய்யப்பட வேண்டிய ஒப்பற்ற மனித சேவை. இவற்றில் எதுவுமேட்ம இல்லாமல் முழுக்க முழுக்க பணம் தேடும் தொழிலாக அது மாறிவிட்டதை இரண்டு நாட்கள் ஓர் அரசாங்க ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தால் அனுபவ ரீதியாகக் காணலாம்

இந்தக் கீழ் நிலைக்குக் காரணம் வைத்தியர்களுக்கு நிலவும் தட்டுப்பாடும், வழிப்படுத்தல் வைத்திய முறையும் தான் என்று நாம் கருதுகிறோம். இவை இரண்டும் தவிர்க்கப்படுதல் அவசியம். வைத்தியர்களுக்கு அதிக சம்பளத்தை கொடுத்து ஆஸ்பத்திரியில் அமர்த்த வேண்டும். இல்லையேல் தனிப்பட்ட வைத்தியம் செய்யுமாறு "கலைத்து" விட வேண்டும்.

உண்மையான வைத்தியனுக்கு உரிய குணாம்சங்கள் வைத்தியர்களிடம் வளரும்வரை சுற்று நிருபங்களால் எதனைச் சாதிக்க முடியும்?

### பயிலுனர் ஆசிரியர் தெரிவு
## கிளிநொச்சியில் மீள் பரிசீலனை

கிளிநொச்சி மே 8
கிளிநொச்சி மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியர் தெரிவில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றிய மீள்பரிசீலனை வேலைகள் இந்த வாரம் கல்வித்திணைக்களக் குழு ஒன்றினால் ஆரம்பிக்கப்படும்.

இதுவரை 22 மேன் முறையீடுகள் கிடைக்கப்பட்டன என்றும், அவை முதலில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-76)

# மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே நிதி உதவிகள்

### யாழ்ப்பாண, கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு பெரும் பொறுப்பு என்கிறார் பேராசிரியர் அலுவிஹார

கொழும்பு மே 8
வெளிநாடுகளில் இருந்து பல்கலைக் கழகங்களுக்கு கிடைக்கும் நிதி உதவிகளை பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. இந்த விடயத்தில் யாழ்., கிழக்கு பல்கலைக் கழகங்களுக்கு பாரிய பொறுப்பு உண்டு. பிரதேச சனத்தொகைக்கு ஏற்ப கூடுதலான மாணவர்கள் இந்த இரு பல்கலைக் கழகங்களையும் விரும்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போது தான் தாராளமான உதவிகள் கிடைக்கும்.

இப்படிக் கூறினார் பல்கலைக் குழுமானிய ஆணைக் குழுத் தலைவர் பேராசிரியர் ஏ. அலுவிஹார.

"யாழ் பல்கலைக் கழகத்துக்கு நிதி உதவி எதுவுமே கிடைக்கவில்லை. நேரில் வந்த அதிகாரி அதிர்ச்சி" என்னும் தலைப்பில் கடந்த 24 ஆம் திகதி உதயனில் வெளிவந்த செய்தி குறித்து தெரிவிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி உதவி கோரி யாழ் பல்கலைக்கழகத்திடம் இருந்து வேண்டுகோள்கள் எமக்கு கிடைத்திருந்தது நியாயமான முறையில் நிதி அவர்களைச் சென்றடையாமல், இருந்தால் அது நிதி வழங்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட திட்டங்கள் பூரணமாக்கப்பட்டிருக்க வேண்டியது அவசியம். யாழ் பல்கலைக் கழகத்தில் அனு மருத்துவ துறை ஆரம்பிப்பதை நன் நிராகரிக்க முடியும் ஆனால் அவ்வாறு செய்யாமல் தனிப்பட்ட முறையில் நானே அதற்கு முயற்சிக்கின்றேன் சுகாதார அமைச்சுடன் இது தொடர்பாக பேசி இவ்விடயம் சிறப்பாக நடைபெறச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறேன். இது தொடர்பாக அமைச்சிடம் இருந்து மறு மொழியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

தற்போது யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் உள்ள வசதிகளை நோக்கும் போது அதற்கு மாணவர்கள் போதாது. மாணவர்கள் அங்கு போக முடியாது என்று கூறுகிறார்கள்.

அது போல கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 3 பீடங்களில் மாணவர்கள் குறைவாக உள்ளனர். போக முடியாது என்று நாளுக்கு நாள் மாணவர்கள் வெளியேறுகிறார்கள்.

இதே போல ருஹுணு பல்கலைக் கழகத்திலும் சில பீடங்களுக்கு மாணவர்கள் போக முடியாது என்று கூறுகிறார்கள்.

எனவே மாணவர்கள் கூடுதலாக விரும்பக் கூடிய சூழ்நிலையில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் போது பல்கலைக் கழகங்களுக்கு கூடுதலான நிதியுதவி (வெளிநாட்டு) வழங்கக் கூடியதாக இருக்கும் இப்படி அவர் கூறினார். (இ-2)

### நெடுங்கேணியில்
## செல்லப்பாவின் இன்னிசை

நெடுங்கேணி மே 8
நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தமிழக கலைஞர் தேனிசை செல்லப்பாவின் இன்னிசை கீதங்களை கண்டு களிக்க பெரும் திரளான மக்கள் கூடி இருந்தனர். விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கைலாசம் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

மறைந்த விடுதலைப் போராளிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

விடுதலை புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன் பேசுகையில் மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இந்த நிழ்வு நிரூபிக்கின்றது என்றார்.

முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திவாகர் பேசும்போது சுய நிர்ணய உரிமைக்கு மொழி மண் வரலாறு எவ்வளவு முக்கியமோ அதேபோல கலை கலாச்சாரமும் முக்கியமானவை என்றார்.

யாழ் மாவட்ட விடுதலை புலிகளின் கலை கலாசாரப் பொறுப்பாளர் புதுவை ரத்தினதுரை கலைஞர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

யாழ் மாவட்ட மகளிர் பிரிவு பொறுப்பாளர் சீதாவும் பேசினார்.

முல்லை மாவட்ட கலை கலாசார பொறுப்பாளர் போஷன் நன்றியுரை கூறினார். (இ-108)

## திறந்த பல்கலைக்கழகத்தில் 3 புதிய கற்கை நெறிகள்

### விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 8
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மூன்று புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றிக்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 10 ஆம், 15 ஆம் திகதிகளில் திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய கொக்குவில் செயலகத்தில் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளைப் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:-

1. விஞ்ஞானமாணிப்பட்ட நெறி (B. Sc) 3 வருடக் கல்வி

2. தொழில் நுட்பவியல் டிப்ளோமா (Dip in Tech) 2 வருடக் கல்வி. இதில் மின்னியல், இலத்திரனியல், எந்திரவியல், கட்டடவியல், புடவையியல் (Textile) என்பன அடங்கும்.

இக்கற்கை நெறியை முடித்தவர்கள் தொழில் நுட்ப மாணி (B. Tech) என்ற சான்றிதழுக்கான 2 வருடப் படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுவர். இச்சான்றிதழ் பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும்

3 தொழில் உரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் — 1 வருடக் கல்வி.

விஞ்ஞானமாணிப் பட்ட நெறிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கமும், தொழில் நுட்பவியல் டிப்ளோமா பாடநெறிக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கமும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முதலில் வருவோர்க்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவிருப்பதால் தாமதிக்காது குறித்த தினங்களில் செயலகம் வந்து படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய செயலகப் பணிப்பாளர் திரு. க. கருணாகரன் அறிவுறுத்தியுள்ளார். (உ-ப)

## வன்னிப் பகுதியில் மழை

ஒட்டுசுட்டான் மே 8
சித்திரை மாதம் சிறுமாரி என்பதற்கு அமைய வன்னி பிரதேசம் எங்கும் பரவலாக சிறுமாரி மழை பெய்கிறது.

ஒட்டுசுட்டான் பகுதியில் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

ஒ யிறு அதிகாலையில் முரசுமோட்டை, கண்டாவளை பகுதியில் பெய்த மழையால் நெல் வயல்களில் வெள்ளம் நிரம்பியுள்ளது. (ப-113)

## கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் தபாலகங்கள் இன்றுமுதல் இயங்கும்

1984 ஆம் ஆண்டு டிசம்பர் வன்செயலில் சேதமுற்று இதுவரை இயங்காதிருந்த கொக்குளாய், கொக்குத்தொடுவாய் தபாலகங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் செயற்படவுள்ளன.

இதற்கான ஒழுங்குகளை முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சர் திரு. அ. குணரத்தினம் மேற்கொண்டுள்ளார். (ப-92)

## புதிதாக அடையாளக் கார்ட் பெறுவதற்கான நடைமுறை

கொழும்பு மே 8
1972 ஆம் 1973 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தேசிய அடையாளக் கார்ட்டுகளுக்குப் பதிலாக புதியவற்றை எப்படிப் பெறுவது என்பது குறித்து ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. பந்துல குலதுங்க கீழ் வருமாறு விளக்கம் தந்துள்ளார்

புதியவற்றுக்கான விண்ணப்பங்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி ஒன்றுடன் அப்பகுதி கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் பழைய அடையாள கார்ட்டை கிராம சேவையாளர் பார்வையிடுவார்.

புதிய அடையாளக் கார்ட் கிடைத்ததும் கிராம சேவையாளர் பழையதை பெற்றுக் கொண்டு புதியதை விண்ணப்பதாரியிடம் கொடுப்பார்.

முக்கியமாக, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத விண்ணப்பதாரர், அவரது பாடசாலை விலகல் சான்றிதழ் அல்லது அவரது குழந்தையின் பிறப்பு சான்றிதழ் அல்லது அவரது பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசி மற்றும் வேறு ஆவணங்கள் என்பனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்

மேற்கண்டவாறு திரு. பந்துல குலதுங்க விளக்கமளித்துள்ளார்.
(இ-ப-எ)

## நாணய மாற்று விகிதம்

04-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 229.48 | 230 44 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.25 | 4002 70 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6560.68 | 6587 25 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2370.28 | 2386.53 |
| 100 | பிரெஞ்சு பிராங்க் | 702.77 | 714 88 |
| 100 | ஜப்பானிய யென் | [illegible] | [illegible] |

### நினைவில் இன்று

08-05-1990

● முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி நினைவு தினம்

### மாணவன் நினைவாக முதல் நாள் உறை

யாழ்ப்பாணம், மே 08
சர்வதேச முத்திரை சேகரிப்போர் சங்கத்தின் இரண்டாவது வெளியீடான படித்த இளைஞர் தினவிசேஷ முதல் நாள் உறை இம்மாதம் 13 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்படும்.

காலஞ்சென்ற யாழ். மத்திய கல்லூரி மாணவனாகிய செல்வன் முத்துக்குமாரு கோபால கிருஷ்ணனின் முதலாவது ஆண்டு நினைவை ஒட்டி இது வெளியிடப்படுகிறது. (இ-7)

### சமய அரங்கில்

### தேர்த்திருவிழா

முல்லைத்தீவு. மே 08
தண்ணீரூற்று ஊற்றங்கரை விநாயகர் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை தண்ணீரூற்று நகைத் தொழிலாளர்களால் வெகுவிமரிசையாக நடத்தப்படும். (இ-92)

### விசேஷ பூசை

முல்லைத்தீவு. மே 08
முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பு ஸ்ரீ வீரசுத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை சித்திரை பூரணை விரதம் சித்திர குப்த விரதம் ஆகிய வற்றை ஒட்டி விசேஷ பூசையும், அபிசேகமும் அன்னதானமும் நடைபெறும்.

அத்துடன் சித்திர குப்த படிப்பும் இடம் பெறும்.

★

முல்லைத்தீவு வட்டுவாகல் சப்தகன்னியா தேவஸ்தானத்தில் நாளை 9 ஆம் திகதி சித்திரகுப்த படிப்பும் விசேட பூசையும், அன்னதானமும் நடைபெறும்.

★

முல்லைத்தீவு கள்ளப்பாடு ஆதிவைரவர் கோயிலில் நாளை சித்திரகுப்தவிரதம் அனுஷ்டித்து விசேட பூசையும், படிப்பும் இடம் பெறும். (இ-92)

### வாசகர் திருமுகம்

### தூங்கும் ஜெனரேட்டர்

மின்சாரத் தடை ஏற்படும் சமயங்களில் நிந்தவூர் அரசினர் வைத்திய சாலைக்கு மின்சார வசதி அளிப்பதற்கென சுகாதார அமைச்சு மின் ஜெனரேட்டர் ஒன்றை அனுப்பி வைத்தது.

அந்த ஜெனரேட்டர் கடந்த சுமார் ஒருவருடகாலமாக பூட்டிய அறைக்குள் தூங்கிக் கொண்டிருக்கின்றது!

வர்த்தக, வியாபாரத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூரின் பெரு முயற்சியால் சுகாதார அமைச்சு இந்த ஜெனரேட்டரை நிந்தவூர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தது.

10 கே. வி. ஏ. வலுவுடைய இந்த ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்குவதற்கான வயறிணைப்புச் செய்யும் விடயத்தில் இலங்கை மின்சார சபை பல மாதங்களை இழுத்தடித்தது.

தற்சமயம் ஜெனரேட்டரை வைப்பதற்கு தனியான கட்டிட வசதி ஏற்படுத்துவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் எவ்வளவு கால தாமதத்திற்குப் பின்னர் தான் இந்த ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் பெறும் பாக்கியம் கிடைக்குமோ?

எஸ். சொலமன்
நிந்தவூர்

### பாவம் பெண் நாய்க்குட்டிகள்

பெண் குட்டிகளாகப் பிறந்த குற்றத்திற்காக வீதிகளில் நின்று அந்தக் குட்டிகள் அலறுகின்றன. வீட்டில் உள்ளவர்கள் கல்லெடுத்து கலைக்கிறார்கள். அவைகள் வீதிகளுக்கு குறுக்கே சென்று வாகனங்களால் மோதுண்டு பிஞ்சிலேயே பரிதாபமாக இறக்கின்றன.

வீதிகளில் நாய்க்குட்டிகளை விடுபவர்களை குறை சொல்ல முடியாது. பெண் நாய்களுக்கு கருத்தரிக்காமல் ஊசி போட்டு இந்த அழிவைத் தடுக்க இரக்க சிந்தையுள்ள புத்திஜீவிகள் வழி தேட மாட்டார்களா?

சுகாதாரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இலவசமாக கிராமங்கள் தோறும் சென்று இதைச் செய்தால் இந்தக் கொடுமைகளைத் தவிர்க்கலாம். வீதி வீதியாக நாய்களைப் பிடித்து சித்திரவதை செய்து கொல்லுகின்ற பாவத்திலிருந்தும் விடுபடலாம்.

க. நக்கீரன்,
கோண்டாவில்.

## செய்திக்கொத்து

### தபாலகப் பணி நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 8
சுன்னாகம் தபாலகத்தில் பொதுமக்களது நலன்கருதி பணிநேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாதாரண கடிதங்கள் ஏற்கப்படும் நேர எல்லை பிற்பகல் 6 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் காலை 7 மணி முதல் பிற்பகல் 7 மணி வரை மக்கள் உள்நாட்டு வெளிநாட்டு முத்திரைகளை இங்கு பெற்றுக் கொள்ளலாம் ஆயினும் 100 ரூபா முத்திரை விற்பனை குறித்து அறிவுறுத்தல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என தபாலக அதியர் திரு. இ. திருநாவுக்கரசு உதயனுக்குத் தெரிவித்தார். [ப]

### மூக்குக் கண்ணாடி

நெடுந்தீவு, மே 8
யாழ் லயன்ஸ் கழகம் நெடுந்தீவில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பார்வை குறைந்தோருக்கு மூக்குக்கண்ணாடிகளையும் சத்துணவுப் பொருட்களையும் இம்மாதம் 11 ஆம் திகதி இலவசமாக வழங்கும். (ப-111)

### மீண்டும் பஸ் சேவை

முல்லைத்தீவு, மே 8
நிறுத்தப்பட்டிருந்த முல்லைத்தீவு — கொழும்பு பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் படி மேலிடம் உத்தரவிட்டுள்ளது.

எனினும் கடுகதி சேவையாக இருக்க மாட்டாது என்று கூறப்படுகிறது. (இ-92)

### கலை ஒழுங்கு பட்டம்

புதுக்குடியிருப்பு, மே 8
புதுக்குடியிருப்பு சமூக நாடக கலைஞர் கமலேஸ் செபஸ்தியாம்பிள்ளைக்கு அண்மையில் புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை "நாடக ஒளி" என்ற பட்டம் வழங்கி கௌரவம் செய்தார் இக்கலைஞரின் 25 வருட சேவையை பாராட்டுமுகமாக புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் விழாவன்று நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சியின் போது இப்பட்டமளிப்பு இடம் பெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை, கலாசார செயலாளர் எஸ். ப. நடா, கிராமோதயச் சபைச் செயலாளரும் கிராம சேவையாளருமான திரு வீ. கனகசுந்தரசுவாமி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர் (ப-126)

### படகோட்டி சுகவீனம்

நெடுந்தீவு, மே 8
நெடுங்கேணி-குறிகாட்டுவான படகு சேவைக்கு ஒரேயொரு படகோட்டி மட்டும் இருப்பதால் அவர் திடீரென சுகவீனமுறும் காலங்களில் படகுச் சேவை ஸ்தம்பிதமடைவதாக சொல்லப்படுகிறது. (இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார் கோவில்) ரதோற்சவ மலர்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் அருள் மிகு அம்பிகை காமாட்சியின் ஆலயம் யாழ் நகரில் மிக சாந்நித்தியமும், அருளும் நிறைந்த பிரசித்தி வாய்ந்த ஒரு சக்திபீடமாகும். இந் நாட்டில் காமாட்சி அம்மன் என்னும் பெயருடைய ஆலயம் இது ஒன்றே யாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வாலயம் நிர்மாணிக்கப்பெற்றதாக ஸ்தல

## விஸ்வகுல மக்கள் வழிபடும் தலம்

வரலாறு கூறுகின்றது. இது யாழ்ப்பாணம் காங்கேசன் துறை நெடுஞ்சாலையில், யாழ் கோட்டையிலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில், குளங்கரைமருதடி என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெற்ற திவ்யசூழலில் அமைந்துள்ளது.

கோடும், குளமும், குளத்தருகே சூழ்ந்துநின்ற நெடு மரங்களும், காடும் செடியும் நிறைந்த இடமாதலால் இங்கு வனதேவதைகள் சஞ்சரித்து வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. அன்றொரு நாள் மதிய வேளையில் அங்கு விறகு சேகரிப்பதற்காக சுற்றாடலில் வசித்து வந்த இளநங்கை ஒருத்தி அவ்விடத்திற்கு வந்து ஏதோ ஒரு விதத்தில் அசுத்தப்படுத்தி விட்டகாரணத்தினால் அங்கு நிலை கொண்டிருந்த தேவதை சீற்றங்கொண்டு அவளைப் பயங்கரமான முறையில் சிட்சித்து விட்டதாம்.


இதனால் அக்கிராம மக்கள் பெரிதும் பீதியடைந்து விட்டனர். இதன்பின் அக்கிராமத்தில் வசித்து வந்த கண்ணம்மாள் என்னும் விஸ்வகுல மூதாட்டி ஒருவர் அத்தேவதையைப் பிரீதிபண்ணும் நோக்கத்துடன் அவ்விடத்தில் ஒரு கல்லை ஸ்தாபித்து அதற்கு நாச்சியார் என்று நாமம் சூட்டி விளக்கேற்றி வைத்து ஆராதித்து வந்தார். நாச்சியார் என்ற பெயரே காலப்போக்கில் நாச்சிமார் என மாறியிருக்கலாம். இதனைத் தொடர்ந்து இக்கிராம ஜனங்களும் வழிபடலாயினர்

1870 ஆம் ஆண்டளவில், திரு. காசிநாதர் தம்பு என்

### மலர் ஏற்பாடு

- ச. நந்தகோபால் -

பவர் இவ்விட த்தில் ஒருகற் கட்டிடத்தை நிறுவினார். அங்கே மஹாமாரி அம்பிகையின் சிலையைப் பிரதிஷ்டை செய்தார்கள். ஆனால் இவ்விடத்தில் வாழ்ந்து வரும் மக்கள் விஸ்வப்பிரம்மகுலப் பொற் கொல்லர்களாகையால் அவர்களுடைய குல தெய்வமான ஸ்ரீ காமாட்சி அம்பாளையே ஸ்தாபிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் மேலோங்கி நின்றது.



இவவருடம (1966- 1990) வெள்ளி விழாக்கண்ட நாச்சிமார் கோவில் மூன்று வாசல் சப்பரத்தின் எழில் தோற்றம்.

இதனையடுத்து அக்காலத்தில் வண்ணார் பண்ணையில் வசித்து வந்த பிரபல விஸ்வ குலப் பெரியாரான ஸ்ரீமான் வைத்திலிங்கப் பத்தர் என்பவர் தாய் நாடான இந்தியாவிற்குச் சென்று அங்கு தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த திருவேரகம் என்னும் ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலையில் தொழில் நடத்திவந்த பிரபல சிற்பவிற்பன்னரான பிரம்மஸ்ரீ கண்ணையா ஸ்தபதியார் என்பவரைச் சந்தித்து தான் நாடி வந்த நோக்கத்தை வெளியிட்டார். அது கேட்ட ஸ்தபதியார் பரமசந்தோஷமடைந்து தான் தனது வாழ்நாளில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும், கைத்திறனையும் கலைத்திறமையையும் கொண்டு காஞ்சித் திருப்பதியில் திருக்கோட்டம் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காமாட்சிதேவியின் சகல அம்சங்களையும் அமைத்து ஒரு சிலர் விக்கிரஹத்தை வடித்து வைத்திருப்பதாகவும் அதை யாழ்ப்பாண விஸ்வப் பிரம்ம குல மக்களுக்கு நன்கொடையாகத்தர விரும்புவதாகவும் கூறி அந்த அழகிய பிரதிமையை வைத்திலிங்கப் பத்தரிடம் கையளித்தார்.

-எஸ். நாராயணசாமி-

அண்ட கோடிகளின் நாயகி ஆதிபராசக்தியின் பலவடிவங்களுள் நான்கு திருக்கரங்கள் கொண்டு அவற்றில் கரும்பு வில், மலரம்பு, பாசம், அங்குசம் தாங்கி நின்ற கோலத்தில் பஞ்சதாசாக்ஷரி, ஷாடசி ஆகிய தலையா ஸ்ரீவித்யா மந்திரங்களால் உபாசிக்கப்படும் ஸ்ரீ லலிதா ராஜராஜேஸ்வரி பராபட்டாரிகாவெனும் பூர்ணப் பிரஹ்மசக்தி, தொண்டை மண்டலக் காஞ்சி நகரின் அரசிஸ்ரீகாமாட்சியின் பூர்ண அம்சங்களைக் கொண்டு கற்பவித்தகர் கண்ணையா ஸ்தபதி அவர்களால் உருவாக்கப் பெற்று நன்கொடையாகத் தரப்பட்ட விக்கிரஹமே இன்று ஈழ காஞ்சிஸ்ரீகாமாட்சி அம்பிகையின் ஆலயக்கருவறையில் அருள் வீற்றிருந்து கொண்டு அடியார்க்கு கிருபை பாலித்துக் கொண்டிருக்கிறாள்!

1870 ஆம் ஆண்டு சிறு கற்கட்டிடமாக இருந்த இக்கோவில் அதன்பின் பல கால கட்டங்களில் விஸ்தரிக்கப்பட்டு இன்று மஹாமண்டபம், ஸ்நான மண்டபம், வசந்த மண்டபம், சுற்றுப் பிரகாரம், பரிவார மூர்த்திகளுக்கான கருவறைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு பூர்ண பொலிவுடன் விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் சிகரமாக இன்றுகம்பீரமாகவானோங்கி நிற்கும் அழகிய ராஜ கோபுரம் 1986 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் 12-05-1986 ல் நடைபெற்றது.

இக் கோவிலில் நடைபெறும் நித்திய நைமித்திய பூஜாகலாபங்களைப் பற்றிக் கவனிப்போம் தினமும்உஷைகாலம், உச்சிக்காலம், சந்தியாகாலம், அர்த்த ஜாமம் ஆகிய நான்கு காலப் பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பிரதிவெள்ளிக்கிழமையில் மாலை சுக்கிர வார பூஜையும், நடைபெறுகின்றது. மாதம் தோறும் பூரணையன்று மாலையில் திருவிளக்குப் பூஜை- நடைபெறுகிறது★

### என்னிடர் களையாயோ?

இராகம்: ரஞ்சனி தாளம்: ஆதி

பல்லவி

ஜெனனி ஜெனனி ஜெனனி
ஜெககாரணி பூரணி நாரணியே ஜெய (ஜெனனி)

அனுபல்லவி

கான விநோதினி காமாட்சியே பரம
சிவனார் மனம் மகிழ் ரஞ்சனியே பவானி (ஜெனனி

சரணம்

பாடிப்பாடி உனைப் பணிவோர்க் கெல்லாம்
கோடிகோடி பாபம் பறந்தோடுமே நாளும்
தேடித்தேடித் திரிந்தலையச் சம்மதமா?
ஓடிஓடி வந்தென்னிடர்களை களையாயோ தாயே!
(ஜெனனி

-நா. சண்முகலிங்கம்.

திருவருள் எங்கனும் தேங்கிடக் [illegible] யில்
சிறம் செய்பன்ன பூரணியே!

உங்கள் மங்களகரமான வைபவங்களை
கறுப்பு — வெள்ளை — வர்ணங்களில் தரமாகப்
★ படம் பிடித்துக் கொள்ள ★

றெக்ஸ் ஸ்ரூடியோ
606 (918), கே. கே எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.

சணசண கங்சண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்!

★ கார் ★ சைக்கிள் ★ மோட்டார் சைக்கிள் ★ உதிரிப்பாகங்களுக்கு

கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்
591, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

பரிபுரம் நூபுரம் தண்டை சிலம்பணி
பாதபங் கேருகப் பார்வதியே!

★ ஆங்கில மருந்து வகைகள்,
★ அன்பளிப்புப் பொருட்கள்
★ பால்மா - சொக்கலேட் வகைகள்
மற்றும் மணிக் கூடுகளுக்கும்

லிங் பார்மஸி குறோசறி
கே. கே. எஸ். வீதி, தட்டாதெரு.
யாழ்ப்பாணம்.

வலமுற நாதனை வைத்து மணந்தொரு
மாவடி நீழல மர்ந்தவளே!

★ தங்கப் பவுண் நகை வியாபாரம் ★

★லலிதா ஜுவல்லறி★
"லலிதா மாளிகை"
213, 133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அருளுறு நெஞ்சினில் அங்கயற் கண்களில்
ஆட்சி புரிந்திடும் தென்னவளே!

உங்கள் அச்சு வேலைகள் எதுவானாலும்
எங்களை நாடுங்கள்

சாந்தி அச்சகம்
575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

நலமுறும் சந்ததி நாடியுன் சந்நிதி
நம்பியு வந்தருள் நல்குவையோ!

★ நவீன வேலைப்பாடுள்ள அழகிய
தங்கப் பவுண் நகைகளுக்கு

சோபிகா நகை மாளிகை
111, 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குலமுறும் எங்குடி ஓங்கியு யர்ந்திடக்
கோரினன் காஞ்சியின் கோமளமே!

அசல் 22 சரட் தங்கப் பவுண் நகைகளை
நம்பிக்கையுடன்
தெரிவு செய்ய வாருங்கள்

கே. கே. இராசரத்தினம்
நகை மாளிகை
277, [129], கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்
★
அபிராமி அந்தாதி தினமும் ஓதுங்கள்
25 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி
''அபிராமி அந்தாதி''
நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்

மில்க்வைற், - யாழ்ப்பாணம்.

பண பண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்!

★ சகலவிதமான கார்
★ மோட்டார் சைக்கிள்
★ ஸ்கூட்டர் உதிரிப்பாகங்களுக்கும்

ரவி மோட்டோர்ஸ்
245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வியனுறும் ஐங்கரன் வென்றிடு சண்முகன்
மிஞ்சி யணைத்திடும் நெஞ்சினரோ!

★ மின் இணைப்புப் பொருட்கள்
★ இயந்திர உதிரிப்பாகங்களுக்கு

சிவா எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்
635, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் தங்கரதமேறி
இன்று தந்திடுவாள் திருக்கோலம்
நீவிர் கண்டிடுவீர் அருட்கோலம்!

ஆங்கில மருந்து வகைகளுக்கு நாடுங்கள்

கவிதா பார்மஸி
959, கே. கே எஸ். வீதி,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்!

அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்பு வாசனைப் பொருட்களுக்கும்

அம்பிகாபதி
பான்ஸி றேடர்ஸ்
9 A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுகவதி புங்கவி சம்புகுடும்பினி
சுந்தரி துக்க நிவாரணியே!

லேடிஸ் அன் ஜென்ஸ் சிகை அலங்காரம்

ஷகி சலூன்
(ஏ. ஜி. டாஸ்)
596, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பிகை
தேரேறி வரும் இந்நாளில்
அன்னை அருள்பெற வாழ்த்துகிறோம்!

தங்க, வைர நகை வியாபாரிகள்

வோக் ஜுவல்லர்ஸ்
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பகவதி அந்தரி பைங்கழை ஏந்திய
பஞ்சமி பாப விமோசனியே!

பேபி சூட் ● றெடிமேட் ஆடை வகைகள்
● சேட்டிங் சூட்டிங் ● பற்றிக் கவுண்
● பான்ஸி கூட்ஸ் ● பிளாஸ்ரிக் பொருட்களுக்கும்

வெல்கம் சேல்ஸ் சென்ரர்
978, கே. கே. எஸ். வீதி.
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.



கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாக
வழங்குபவர்கள்:

எஸ். எம். பெர்னான்டோ
(இலங்கை வங்கி அருகாமை)
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நகபதி நந்தினி மாவடி கம்பையில் நம்பன் அணைத்திடும் நாரணியே!
★ கேக் சாமான்கள் ★ பலசரக்குப் பொருட்கள் ★ சாப்புச் சாமான்கள் ★ பாடசாலை உபகரணங்கள் ★ பிளாஸ்ரிக், அலுமேனியப் பொருட்கள் ★ அன்பளிப்புச் சாமான்கள்
அனைத்தையும் நிதானமான விலையில் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கரன் ரேடிங் சென்ரர்
இல. 764, கே.கே. எஸ். வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் [ நாச்சிமார் கோவில் ] ரதோற்சவ மலர்


காமாட்சி! வரமாட்சி! தாவாட்சி!

கலர் பிலிம், பேப்பர் - பிரிண்டிங், கமராக்கள்
மற்றும் கறுப்பு - வெள்ளைப் புகைப்படங்களுக்கும்
உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கும்

**★ பேபி போட்டோ ★**

சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
கிளை: பரமேஸ்வராச்சந்தி, பலாலி வீதி,

---

எண்ணியபடி நீயருளிட வருவாய்
எங்குல தேவியளே!

சிறந்த முறையில் வயலின், மிருதங்கம்
கற்றுக்கொள்ள வாருங்கள்

**சரஸ்வதி இசைக் கல்லூரி**

''ஸ்ரீ ரகு ராம ஜெயம்''
2, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்!

சுத்தமான 22 கரட் தங்கத்தில்
குறித்த தவணையில் நகைகள் செய்து
கொடுக்கப் பெறுங்கள்

**மதி ஜுவல்லறி**

226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

இருந்த நாச்சி அம்மை முன்னே
இருந்த சூழல் இப்போ எங்கே?

நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**★ சன்ஸ்ரார் ஜுவல்லறி ★**

147 B (337) கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்,

---

கிராமஞ் சூழல் பொற்கொல் லோசை
கிறங்க வைக்கும் எந்த நாளும்!

புதுப்புது டிசைன்களில்
தங்க நகைகள் உற்பத்தியாளர்

**நியூ புஷ்பா ஜுவல்லர்ஸ்**

284, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

எண்ண முடியாக் கோலம் கண்டு
எம்முன் கோபுரம் இன்றெழும் காட்சி!

★ தங்கப் பவுண் ★ வைரம் ★ வெள்ளி
நகைகள் உத்தரவாதத்துடன்
நீங்கள் வாங்க

**நியூ லக்கிஸ்டார் ஜுவல்லறி**

229 A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

வண்ணை காமாட்சி அன்னை கோவில்
வடிவம் கண்டு வரமும் கேட்போம்!

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
தகுந்த இடம்

**சுசீலா ஆபரண மாளிகை**

248, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

மருது, நாவல் மரங்க ளெங்கே
மன்னு புகழ் காட்சி எங்கே!

உறுதியும் உத்தரவாதமும் உள்ள தங்க, வைர
நகைகளுக்கு உகந்தவர்கள்

**அருள் முருகன் ஜுவலர்ஸ்**

96/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## எங்கும் ஆன்மீக அருட்சக்தியை பரப்பும் திருத்தேர் வீதியுலா

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று கூறினாள் ஔவை மூதாட்டி. ஒவ்வொரு நாட்டிற்கும், கிடைத்தற் கரிய பொக்கிஷமாக விளங்குவன செயல்களையும் அழிப்ப பதையே குறிக்கும்.

ஒவ்வொரு திருக்கோவிலுக்கும் ஒரு திருத்தேர் இன்றியமையாத தொன்றாகும்.

இறைவனின் இல்லமாகிய திருக்கோயிலில் இறைவன் போன்ற காரணங்களினால் கோயில்களுக்கு உள்ளே செல்ல முடியாதவர்களுக்கு அருள் பாலிப்பதற்காகவே திருத்தேர் வீதி உலா வருகின்றது. திருக்கோயிலுக்கு வெளியே வீசிக்கொண்டிருக்கின்ற தெய்வ அருளுக்கு இவர்கள் சிறிது தயக்கமடைந்து நிற்பாராயினும் அவர்களும் அவ் இறையருளைப்பெற வாய்ப்புண்டு.

திருத்தேர் வீதி உலா வருகின்ற ஒவ்வொரு முறையும் நாடு, நகரமென்ன இந்த பூவுலகமே அருள் பாலிக்கப்பட்டு நற்கதி பெறுகின்றது. எல்லாம் நிறைந்த இறைவனுக்கும் அவனது சக்தியாகிய தேவிக்கும் பேரில்லமாகிய திருக்கோயில் ஆன்மீக வாழ்வுக்குரிய அருட்சக்தியினை திருத்தேர் வீதியுலா மூலம் உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

**செல்வி கி. இந்திரகலா**

இரத்தினமணி, புஷ்ப, பூஷித, ஸ்வர்ண வாகனமாகிய திருத்தேரின்றி எந்தக் கோயிலினதும் அருட்கைங்கரியமும் கைகூடாதென்பது ஆன்றோர் கண்டறிந்த உண்மையே, திருத்தேர் வீதி வலம் வருடந்தோறும் வலிய வந்தாட் கொள்கின்ற இறைவனின் சக்தியினை அனைத்துலக்கும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது.



வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய முகப்புத் தோற்றம்

ஆலயங்களே.

ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைக்கப் பெற்று, நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற வேண்டும். கோயில்களில் பெருவிழாவாகிய கொடியேற்றம் முதல் திருத்தேர் வீதியுலா தீர்த்தோற்சவம் என்பன நடைபெற வேண்டும்.

மக்களுக்கு பிரபஞ்சோற்பத்தியின் தன்மையையும் அதன் தத்துவத்தையும் விளக்கி ஆன்மாவின் ஈடேற்றத்திற்கு பயன் அளிப்பதற்காகவே வருடா வருடம் கொடியேற்றி விழா எடுக்கப்படுகின்றது. தேர்த் திருவிழாச் சங்கார கிருத்தியத்தை உணர்த்துவது இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பவற்றில் ''அழித்தல்'' என்ற கருத்தை உணர்த்துவதே தேர்த்திருவிழாவாகும்.

அழித்தல் என்று கூறும் பொழுது நான் எனது, என்ற அகங்காரத்தையும், தீய தனது மேலான ஒளிவடிவில் தோன்றி அங்கிருக்கும் விக்கிரகத்தில் தம்மை வெளிப்படுத்தி, அங்கிருக்கும் அடியார்களுக்கு அருள் கொடுக்க வேண்டுமென்பதற்காக அந்தணர்கள் இறைவனை வேண்டி ஆதிமூலத்தில் மந்திரப்பூசனை செய்கிறார்கள் மகா மண்டபம்வரை நிற்கின்ற அடியார்களுக்கு தெய்வ அருள் கிட்டுகின்றது. எல்லோரது பிரார்த்தனைக்கும் இறைவன் அருளை வாரி வழங்குகின்றான்.

ஆனால் சிரமம், ஆசௌசம், மனப்பூசல், துன்பம், மனக்குற்றம், முதுமை

மலர் தயாரிப்பு:
''உதயன்'' செய்தியாளர்
த. பரமலிங்கம்

இன்று (08 - 05 -90) நடைபெறும் வண்ணை ஸ்ரீகாமாஷி அம்பாளின் தேர் பவனியை அனைத்து அடியார்களும் கண்டு அம்பாளின் அருள் பெற்று நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று சீரும், சிறப்புமாக வாழ அம்பிகையின் திருத்தாள்களை வணங்குவோமாகவ★

## நாச்சிமார்கோவில் அறங்காவல் சபைத்தலைவர் ஆசிச்செய்தி

அண்மைக்காலத்துக்குரிய எமது கோயிலில் பல அபிவிருத்தித் திட்டங்கள், நிர்வாக சீர்த்திருத்தங்கள், அறப்பணிகள் முதலியசிறப்பு அம்சங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவைகள்யாவும்இந்த தேவஸ்தான ஆதீனத்தைச் சேர்ந்த இளைய தலைமுறையினரதும் மற்றும் ஆலயச் சூழலில் உள்ள இளைஞர்களினதும் பெருமுயற்சினாலேயே நிறைவேற்றிவைக்கப்பெற்றுள்ளன

மேலும் இந்த ஆலயத்தில் நடைபெற்ற நானாவித திருப்பணிகள் முதலியவற்றுக்கும் நன்கொடை தந்து மற்றும் பலவிதங்களிலும் உதவிய பிரமுகர்கள், கனதனவான்கள், பக்தர்கள், அடலவர்கள் யாவர்களுக்கும் எனதும் தேவஸ்தான ஆதீன பரம்பரையினதும்உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எல்லாம் வல்ல அண்ட கோடிகளின் அன்னை, ஸ்ரீகாமாஷிதேவி யாவருக்கும் நிறைந்தஆரோக்கியத்தையும் சகல சம்பத்துக்களையும் மேலாம்பல சிறப்புக்களையும், நீண்டஆயுளையும்கடாட்சிக்க பிரார்த்திக்கின்றேன்.

**விஸ்வஸ்ரீ இ.வே.கந்தசாமி**

## கோபுரம் இன்றெழும் காட்சி

மருது நாவல் மரங்க ளெங்கே
மங்கை ஒருத்தி கொங்கை திருகி
இருந்த நாச்சி அம்மை முன்னே
இருந்த சூழல் இப்போ எங்கே?
கோவில் வாசல் மருங்கே செல்லும்
காங்கே சன்துறைச் சாலை நீளும்!
ஆவின் கன்றும் ஆடும் வேறும்
ஆலயம் பின்னுள குளத்தில் சேரும்!
இராம நாதன் வீதி முன்னால்
இட்டுச் செல்லும் பல்கலைக் கழகமே!
கிராமஞ் சூழற் பொற்கொல் லோசை
கிறங்க வைக்கும் எந்த நாளும்!
விடியல் பொழுதில் விண்ணில் பறக்கும்
விமானம் நெஞ்சை அதிர வைக்கும்
கொடியார் சிலநாள் குந்தி இருந்த
கோலம் தேர் முட்டி பக்கம் கண்டோம்!
வண்ணை காமாட்சி அன்னை கோவில்
வடிவம் காலம், காலங்க ளெங்க
எண்ண முடியாக் கோலம் கண்டு
எம்முன் கோபுரம் இன்றெழும் காட்சி!

**கவிகரன்**


நாச்சிமார் தேரோடித் திருப்பவனி
நாளின்று வந்தருள் தருவதாக!

★ அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்!

**★ மஹாலக்ஷ்மி ★**
**ஜுவல்லறி மார்ட்**

213 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

● நவீன வேலைப்பாடுள்ள தங்க வைர
நகைகளை விரும்பிய வகைகளில்
பெற்றுக் கொள்ள

**ஜெயகிருஷ்ணா ஜுவல்லர்ஸ்**

76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

வண்ணைக் காமாட்சி வண்ணரதம்
வருகின்ற நாளதனில் கண்டிடுவோம்!

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**வெல்கம் ஜுவல்லறி**

164, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்:

---

பொருளுறு புன்னகை பொங்கிட வந்தருள்
பூங்கணை யேந்திய பொன்மகளே!

★ தற்காலத்திற்கு ஏற்ப அழகிய கலைநயம் மிக்க
20, 21, 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

நலமுறும் சந்ததி நாடியுன் சந்நிதி
நம்பியு வந்தருள் நல்குவையே!

★ அழகுக்கு அழகு செய்யும்
★ அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கு

**உதயா ஜுவல்லர்ஸ்**

188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

---

தங்க ரதமேறி வரும் காமாட்சியின் அருள்
இத்தரணி எங்கும் பரவுவதாக!

★ தமிழ், ஆங்கில, ஹிந்தி படப் பிரதிகளை
வாடகைக்கு பெறவும் மும்மொழிகளில்
பழைய - புதிய பாடல்களை ஸ்ரீரியோ
முறையில் பதிவு செய்யவும் நாடுங்கள்

**★ அம்பாள் ★**
**வீடியோ & ஓடியோ சென்ரர்**

894, காங்கேசன்துறை, நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்:

---

வண்ணையம்பதி வீற்றிருக்கும் நாயகியே
வாருமம்மா வீதியுலா திருத்தேரேறி!

★ தரமான பால்மா, ஆங்கில மருந்து வகைகளை
உரிய விலைக்கு வாங்க
நாட வேண்டிய இடம்

**வைஜி மெடிக்கல்ஸ்**

520, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

அரிபிரமாதி அகண்டமும் அண்டமும்
ஆக்கியணைத்தழி வாக்குவையே!

ஆடம்பர அழகு சாதனங்களைப் பெற
நாடுங்கள்

**ரதி பென்ஸி ஹவுஸ்**

53, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

---

வண்ணத் தேரேறி பக்தர் எண்ணம் வளையவரும் வண்ணக் காமாட்சி
எண்ணமெலாம் வீற்றிருப்பாய் நாளும்!

★ சுத்தம், சுகாதாரம் பேணிச் சுவையாக ஐஸ்கிறீம் வகைகள் சிற்றுண்டிகள்
தயாரிப்பதில் யாழ்நகரில் முன்னணியானவர்கள்

**★ ராஜா கிறீம் ஹவுஸ் ★**

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

இகமதில் சாந்தியும் இல்லற மேன்மையும் ஈந்திட வந்தருள் ஈசையளே!

★ நவ நாகரீக தங்க, வைர, வெள்ளி நகைகளை
உறுதி, உத்தரவாதமான முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

**★ ரூபி ஜுவல்லறி ★**

111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

★ பிரதமர் கொலை வழக்கில்

## விடுதலை அடைந்த எதிரிக்கு சுவீடன் நட்ட ஈடு வழங்கும்!

ஸ்டொக்ஹோம் மே 7

சுவீடன் பிரதமர் ஒலோவ் பாமேயைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட கிறிஸ்ரர் பீற்றர்ஸலுக்கு 50 ஆயிரம் டாலர் நட்ட ஈடு வழங்க அரசு முன்வந்துள்ளது.

இக்கொலை சம்பந்தமாக பதினொரு மாத காலம் இவர் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அந்த வழக்கில் ஆரம்ப நீதிமன்றம் எதிரிக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்தது.

ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிரிக்கு எதிராக போதுமான சாட்சியங்கள் இல்லை என்று கூறி எதிரியை விடுதலை செய்தது.

காவலில் இருந்த காலத்தில் அடைந்த துன்பங்களுக்காக 3 லட்சத்து 20 ஆயிரம் டொலர் அரசிடம் நட்ட ஈடு கோரியிருந்தார். (எ)

## மண்டேலா - கிளேர்க் பேச்சில் முன்னேற்றம் என்று தகவல்

கேப்டவுண் மே 7

ஆயுதப் போராட்டத்தை ஆபிரிக்க தேசியக்காங்கிரஸ் கைவிடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தென் ஆபிரிக்க அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தூதுக் குழுவிற்கும் தென் ஆபிரிக்க ஜனாதிபதி டிகிளோர்க் தலைமையிலான அரசுக்குழுவிற்கும் இடையேயான முதல் கட்டப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைந்ததைத் தொடர்ந்தே இந்த நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட பேச்சுக்களின் முடிவில்நெல்சன் மண்டேலாவும் ஜனாதிபதி டிகிளேர்க்கும் கூட்டாகச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

''நாம் அனைவருமே வெற்றிவீரர்கள். தென் ஆபிரிக்காவே ஒரு வெற்றி வீரன்''- இப்படி 71 வயதான ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் பிரதித் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

காங்கிரஸின் தலைமைக் காரியாலயம் ஸ்ாம்பியத் தலைநகரான லுஸாக்காவில் தான் உள்ளது.

● பிரிட்டனில்

## ருஷ்டியை கொல்லத் திட்டமிட்ட ஈரான் பிரசை நாடு கடத்தல்

லண்டன், மே 7

தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்துவார் என்ற சந்தேகத்தின் பேரில் ஈரானிய மாணவர் ஒருவரை பிரிட்டன் நாடு கடத்தியது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இந்த மாணவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

மறைந்த ஈரான் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சால்மன்ருஷ்டியைக் கொலை செய்ய இந்த மாணவர் சதித் திட்டம் தீட்டினார் என்று தெரியவருகிறது.

இஸ்லாம்மதத்தைநிந்திக்கும் 'சாத்தானின் கவிதைகள்' நூலை வெளியிட்டதற்காக ருஷ்டி மீது மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து ருஷ்டி தலைமறைவுவாழ்க்கை நடத்தி வருகின்றார். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச செஞ்சிலுவைத் தினம்
# WORLD RED CROSS DAY
(8-5-90)

## செஞ்சிலுவைச் சங்கத் தோற்றம்

இத்தாலி நாட்டின் வட பகுதியிலுள்ள சொல்வேனியா என்னுமிடத்திலிருந்த ஆஸ்திரியப் படை வீரர்களை சார்டீனிய — பிரான்சுப் படைகள் 1859 ஜூன் மாதம் 24 ஆம் திகதி சின்னாபின்னமாகத் தோற்கடித்தன. இக்கொடூர யுத்தத்தில் படுகாயமடைந்த 39 ஆயிரம் படைவீரர்கள் யுத்தகளங்களிலேயே அனாதரவாக விடப்பட்டனர்.

இந்நிலையை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஓர் இளம்வர்த்தகரான ஜீன்ஹென்றி

இத்தாலியின் வடக்கே சொல்வேனியாவில் பலமிக்க சார்டீனிய - பிரஞ்சுப்படைகளால் தறடிக்கப்பட்டு சின்னாபின்னமான பின் அந்நிலையிலேயே யுத்தகளத்தில் அனாதரவாக விடப்பட்ட பரிதபத்துக்குரிய 39 ஆயிரம் ஆஸ்திரிய வீரர்களது ஜீவன்கள் ஆறுதலுக்கு ஆதரவுக்கு ஏங்கி நின்றன.

அன்று தேவைப்பட்ட இந்த ஆறுதலையும் ஆதரவையும் வழங்கி இன்று வரை படிப்படியாக உலகளாவி வியாபித்த இயக்கமே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாகும். இக்கட்டுரையில் இதன் ஆரம்பமும் வளர்ச்சியும் ஆராயப்படுகின்றன.

ருனான்ற் என்பவர் மறுநாள் கேள்வியுற்றார். பரிதாபப்பட்டார். அண்மையிலுள்ள நகரவாசிப் பெண்களைத் தொண்டர்களாகக் கொண்டு தம்மால் முடியுமானவரை காயமடைந்த அனாதரவான வீரர்களுக்கு உதவிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆதரவற்ற நிலையிலுள்ள இவர்களின் கஷ்டத்தை ஹென்றியால் மறக்க முடியவில்லை.

1862 இல் 'சொல்வேனியாவின் நினைவுகள்' என்னும் நூலைப் பிரசுரித்து ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து யுத்தத்தால் அங்கவீனமடைந்தும், நோய்வாய்ப்பட்டும் உழல்பவர்களுக்கு உதவி கோரினார். சுயமாகவே இயங்கும் சங்கங்கள் ஐரோப்பா முழுவதும் நிறுவப்பட வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுத்தார் வற்புறுத்தினார்.

இம்முயற்சியால் 1863 இல் ஜெனீவா மாநாடு ஒன்று இந்நோக்கத்திற்காக உருவாகியது. சுயமாக இயங்கும் சங்கங்கள் ஒவ்வொரு நாட்டிலும் நிறுவப்பட வேண்டும் எனத் தீர்மானமாகியது. இம்மாநாடு நடந்தேறிய சுவிட்சர்லாந்தில் கௌரவத்திற்காக இச்சங்கங்களில் சின்னம் ஏகோபித்த முறையில் வெள்ளைக் கொடியைப் பின்னணியாகக் கொண்டு சிவப்பு நிறத்தில் சிலுவை நடுவே பொறிக்கப்பட்டதாய் அமைந்தது. இது சுவிற்சர்லாந்தின் தேசியக் கொடியின் மறுதலையாகும். இத்தேசியக் கொடி சிவப்பு நிறப் பின்னணியில் வெள்ளை நிற சிலுவைப் பொறிக்கப்பட்டது என்பது நோக்கற்பாலது.

1862 இல் பல அரசாங்கங்களின் பிரதிநிதிப் பேராளர்கள் முதலாவது ஜெனீவா மாநாட்டில் கைச்சாத்திட்டனர். யுத்தங்களில் காயமுற்றவர்களுக்கும் அவர்களைக் காப்பாற்றிப் பேணும் சேவையாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என கைச்சாத்திட்டனர். பின்னர் காலகதியில் இச்சங்கங்கள் தமது பணிகளைச் சமாதான காலங்களிலும் பொறுப்பேற்றன. இதுவே செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்பமாகும்.

ஆரம்பத்தில் போர்க்காலங்களில் காயம் அடைந்த போர்வீரர்களுக்கும், நோயுற்ற மக்களுக்குமே சேவை புரியத் தோன்றிய சங்கம், இப்பொழுது தனது சேவைகளைப் பரவலாக விஸ்தரித்துள்ளது. நலிவடைந்த இல்லங்களுக்கும், வசதி குறைந்த மருத்துவப் பணிமனைகளுக்கும், பாரிய பாதிப்புக்குள்ளான காயமுற்றோர், உறுப்புக்களை இழந்தோர், தீ, வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் அல்லல்படுவோர்களுக்கும் எல்லாம் கைகொடுத்து உதவ வல்லது செஞ்சிலுவைச்சங்கம் என்பது சர்வதேச உண்மையாகும்.

தேசிய ரீதியிலான அமைப்புக்கள் சர்வதேச ரீதியில் இணைந்து இயங்குகின்றன. இவை இருபெரும் பிரிவுகளில் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்று செஞ்சிலுவைச் சங்கங்களின் ஒன்றியம் எனலாம். இது சமஷ்டி போன்ற அமைப்பையுடையது. இதன் தலைமைச் செயலகம் சுவிட்ஸ்லாந்து ஜெனிவா நகரில் 1919இல் ஸ்தாபிக்கப்பட்டது.



யாழ் செஞ்சிலுவைச் சங்கம் வாதரவத்தையில் அமைத்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம்

## உலக செஞ்சிலுவை விடுத்த கூட்டறிக்கை

ஒவ்வொரு மனிதனதும் உயிர் தனித்துவமானது அதை அழித்தால் திருப்பிப் பெற முடியாது —

மனிதரினதும் இயற்கையினதும் அழிவுகளுக்கு உள்ளாகிறார் ஒவ்வொரு மனித உயிருக்கும் மதிப்பளித்து அமைப்பாது வேண்டும் —

இந்தப் பெறுமதிகளுக்கு உலகம் சமூகிய கோட்பாடுகளும் இன்றி வாஸ்தலத்தல் மனித வாழ்க்கையோ, சமுதாயமோ நகரீகமோ இருக்க முடியாது.

1990 உலக செஞ்சிலுவை, செம்பிறைத் தினத்தை ஒட்டி செஞ்சிலுவை சர்வதேசியக் சமிட்டியும் செஞ்சிலுவை செம்பிறைச் சங்க லீக்கும் வெளியிட்ட கூட்டறிக்கை இவ்வாறு கூறுகின்றது.

"மனித வாழ்வையும் கௌரவத்தையும் பாதுகாப்போம்" என்பதே இந்த ஆண்டுக்கருப்பொருள் என அறிக்கை குறிப்பிடுகின்றது.

தனிமையிலும் வலையிலும் சிக்கி, சிறைகளிலு ஆஸ்பத்திரி அறைகளிலும் அகதிகள் முகாம்களிலும் கைவிடப்பட்டு கெட்டோரின் பெரிவு ... பயப்பட்டு, அந்தையைத் தாயை, மனைவியை குழந்தையை இழந்து வீடுகள் முழுது அனைத்தையும் இழந்தவர்களின் பெயரிலும்.

மோதல்கள் - சேதங்களில் பாதிப்புற்ற மறக்கப்பட்டவர்களின் பெயரிலும்,

"மனித வாழ்வையும் கௌரவத்தையும் பாதுகாப்போம்"

இந்த அறைகூவலை நாம் முழு உலக மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் முன் வைக்கின்றோம்" —

இவ்வாறு கூட்டறிக்கை கூறுகின்றது. [க]


சர்வதேசிய செஞ்சிலுவை தினத்தில்
எமது மனங்கனிந்த
★ நல்வாழ்த்துக்கள்! ★

**அண்ணா கோப்பி**
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

**நியூ சித்திரகலா ஸ்ருடியோ**
70, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

சர்வதேச செஞ்சிலுவைத் தினம் - 1990
மனித நேயப் பணிகள் பெருகிட
இனிதே அமைதி எங்கும் நிலவிட
நாமும் நற்பணி நாளும் ஆற்றிட
வேண்டும் மக்கள் நல் ஆதரவு
Help us to Help you

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

பல் கட்டுபவரும், கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும்
**வி. ரி. அன் சன்ஸ்**
302, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(B. M. Cக்கு முன்பாக)
முகாமையாளர்
Dr. றெஜி சொலமன்

★ **எரிக் ராஜபக்ஷ** ★
இல. 56, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

1. ரி.வி. டெக், பிறிஜ் ஆகியவற்றுக்குத் தேவையான மின் சீராக்கி (Stabi lizer)
2. எஸ் லோன் பைப்புகள், இஞ்சிப் பைப்புகள், மில்லி மீற்றர் பைப்புகள்.
3. சொலிட் மோட்டர்

சுன்னாகம் ஏக விற்பனையாளர்கள்:
**வசந்தி எலெக்ரிக்கல்ஸ்**
110, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

யூரோவில் பொறியியலாளர்கள் நிர்மாணிகள்
(தனியார் லிமிடெட்)
வரையறுக்கப்பட்டது
449, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

சுன்னாகம்
**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

★ **சக்தி பார்மஸி** ★
ஆங்கில மருந்து விற்பனையாளர்
கே. கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

"மனிதவாழ்வு, கௌரவத்தைப் பாதுகாப்போம்"

★ அவலத்தில்,ஆபத்தில் உதவுவது செஞ்சிலுவைச் சங்கம்
நிதிக் கஷ்டத்தில் கை கொடுப்பது ஷப்றா

★ மனிதாபிமானம் ★ பாரபட்சமின்மை
★ நடுவு நிலமை ★ தனித்துவம்
★ தொண்டர்சேவை ★ ஒற்றுமை
★ பிரபஞ்சத்தன்மை

செஞ்சிலுவைச் சங்கத்தின் இந்த அடிப்படைக் கொள்கைகள்
உலகம் முழுவதிலும் வெற்றி பெற
வாழ்த்துகிறோம்

**ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**
61, நியு புல்லேர்ஸ் வீதி,
கொழும்பு-4.
தொலைபேசி: 589310, 500576
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23073

வண்ணை நாச்சியம்மன் வலம்வர வண்ணத் தேரினில் இறைஞ்சுகிறோம்!
'சம்சுன், ரி. வி. மற்றும் சகல றேடியோ, கசற் -றெக்கோடர் விற்பனையாளர்களும், உதிரிப்பாக விற்பனையாளர்களும்.

**றேடியோமனுவல்**
121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5001)


### இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்
## தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1. பின்வரும் காலங்களில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களிற் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசுவழங்க எமது இராஜாங்க அமைச்சரின் அலுவலக தமிழ் அலுவல்கள் பிரிவு முடிவு செய்துள்ளது.
   1. 1981 முதல் 1988 ஆம் ஆண்டின் முடிவுரையான காலப்பகுதி (இது ஒரு காலப்பகுதியாகக் கருதப்படும்)
   2. 1989 ஆம் ஆண்டு
2. கீழ்க்காண்டதுறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்
   1 நாவல் 2 சிறுகதை 3 நாடகம் 4 கவிதை 5 இலக்கியத் திறனாய்வும் விமரிசனமும் 6 சிறுவர் இலக்கியம் 7 சமூகவியலும் மனிடவியலும் 8 அறிவியல் 9. ஏனையவை
3. நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
4. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும். செயலாளரின் முடிவே இறுதியும் முடிவுமானது.
5. மேற் குறித்த காலங்களில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ, நேரடியாகவோ 21/05/90க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

   பணிப்பாளர்,
   தமிழ் அலுவல்கள் பிரிவு,
   இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்,
   9 ஆவது மாடி "றக்ஷண மந்திரய"
   21, வொக்ஷால் வீதி, கொழும்பு - 02.
6. நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் "தமிழ் நூற் பரிசுத்தேர்வு" என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
7. இராஜாங்க அமைச்சரின் அலுவலக, தமிழ் அலுவல்கள் பிரிவினால் 1990 ஜூலை மாதத்தில் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

கே. சி. லோகேஸ்வரன்
செயலாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள்,
இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்.

கொழும்பு - 02
04 - 05 - 1990 [சி-4502]

## ஷப்றா - உதயன் நடாத்தும் தமிழர் பாரம்பரிய விளையாட்டு விழா

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான, மாட்டு வண்டில் சவாரிப் போட்டிக்கு புத்துயிர் அளிக்கும் விதத்தில் மருதனார்மடத்தில் மாபெரும் விளையாட்டு விழா.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள வண்டில் சவாரிப் பிரியர்களுக்கு சவாரிப் போட்டிகளைக் கண்டுகளிக்க மீண்டும் ஒரு நல்ல சந்தர்ப்பம்.

மாட்டு வண்டில் சவாரியில் கலந்துகொள்ள வருடக் கணக்காக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் வண்டி ஓட்டிகளுக்கு அரியதோர் வாய்ப்பு.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விழா அமைப்புக் குழுவினர் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

### போட்டி விவரங்களும் விதிகளும்

போட்டி நடைபெறும் இடம்: மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில்

காலம்: 10-5-1990 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணி

- போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெறுவோருக்குப் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

  முதலாவது பிரிவில் நான்காவது இடத்தைப் பெறுபவருக்கும் பரிசு உண்டு.
- யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் போட்டியாளர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 10-5-1990 முற்பகல் 11-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

  திரு. பீற்றர் (அபிவிருத்திச் சபை உப அலுவலகம், உடுவில்), திரு. பெரியண்ணை (ரயில் நிலைய வீதி, சுன்னாகம்) ஆகிய இருவருடனும் போட்டி சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளலாம்.
- மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு - இராஜ ராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) ரதோற்சவ மலர்

புங்குடுதீவின் தென்புறத்திலே இந்து சமுத்திரக் கரையோரத்தில் ஓர் அழகிய கோவில் வானளாவும் கோபுரத்துடனும் புத்தம் புதிய வண்ணப் பொற்றேருடனும் பரந்து எழுந்து நிற்கும் தேர் முட்டியுடனும், திருத்தமுற்ற தூபிகளுடனும் கண்கவரும் பல்வகை வனப்புக்களுடனும் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது.

இதுதான் பத்தினித் தெய்வம் பாங்குடனமர்ந்துள்ள பழம் பெரும் கண்ணகியம்மன் கோவில். இடையில் இதனை 'இராஜராஜேஸ்வரி அம்பாள்' கோவில் என அழைக்கத் தொடங்கினர் சான்றோர்.

'கன்னலொடு சேரநெல் விளை புங்கைநகர் தன்னிலுறை கண்ணகைப் பெண்ணரசியே' என்று இதன்



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 27-3-89 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட புதிய வசந்த மண்டபத்தின் தோற்றம்.

## பத்தினித் தெய்வம் மிகப் பாங்குடன் அமர்ந்துள்ள கண்ணகி கோயில்

பெருமையைப் பாடிப் பதிகஞ் செய்தவர் எம்மூர் சின்னத்தம்பிப்புலவர். கோவிலிருக்கும் சூழலின் பெயர் கோயிற்காடு. எம்பிராட்டி எழுந்தருளியிருக்கும் இடம் இத்தியடிப் புலம்! தல விருட்சம் இத்தி போலும்?

### புதுமையான வரலாறு

நினைத்தவரம் அருளும் அம்பாள் கோவில் நானூறு ஆண்டுக்கு முற்பட்ட பழைமையுடையது! கண்ணகி கோவில் அமைந்த வரலாறு புதுமை நிறைந்தது. அந்நாளில் எம்மூரில் வாழ்ந்த சைவ வேளாண்குல முதல்வன் ஒருவன் பெரும் மாட்டுமந்தைகளுக்கு உரிமையுடையவனாக விளங்கினான், எருமைகளும் அவனிடம் நிறைய நின்றன. ஒருநாள் காட்டுக்கு மேயச் சென்ற எருமைக் கூட்டம் திரும்பி வரவில்லை. ஏவலாளர் பல திசைகளிலும் தேடினர். கடைசியாகச் சமுத்திரக்கரையில் நின்று கடலை நோக்கியதும் வெகுதூரத்தில் எருமைகள் நிற்பதைக் கண்டு கொண்டனர். விரைந்து சென்றனர் பென்னம்பெரிய பேழையொன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு எருமைகள் உன்னிப்புடன் நிற்பதையுணர்ந்து ஆச்சரியமுற்றனர். பேழையைத் தூக்கிக் கொண்டு கரை சேர்ந்தனர். பேழையோ பெரும் பாரமுடையதாகக் காணப்பட்டது. கரையில் உயர்ந்த கற்பாறையொன்றில் பேழையைத் தூக்கி வைத்து விட்டு அதனைத் திறந்து பார்த்த போது அங்கொரு தெய்வீக உருவம் கிடப்பதை உணர்ந்தனர். அதுவே ஒரு முலை குறைந்த திருமா பத்தினியின் கண்ணகைப் பெண்ணமுதின் உருவம்! பத்தினியை வணங்கினர். முதன் முதல் பத்தினியைக் கண்ணாரக்கண்ட இடமே மாதேவர்முனை. அங்கு மாதேவர் கோவில் ஒன்று இன்றும் இருக்கிறது. மக்களும் அங்கே வழிபாடு புரிகின்றனர். வீர பத்தினியைத் தூக்கிக் கொண்டு மெள்ள மெள்ள நடந்த வந்தனர். நடந்து வந்த வழியே வீராமலை (வீர+அழலை) மலமற்ற வீரபத்தினி கண்ணகி பேழையைத் தூக்கிக்கொண்டு வர முடியாத ஒரு நிலை ஏற்பட்டதும் ஓர் அரசமரத்தடியில் வைத்துவிட்டுக் களைப்பாறினார். இளைப்பு நீங்கிய இடத்தில் இன்று நாச்சிமார் கோவில் விளங்குகிறது. நாச்சிமார்களும் வீரபத்தினித் தெய்வங்களே! பின்னர் பொது மக்களும் கூடிவிட்டனர்– முதன் முதலில் தூக்கிக்கொண்டுவந்த அன்பர்கள் கண்ணகியை தமதுகிராமத்துக்குக்கொண்டு செல்ல விரும்பினர். இன்று அரசாங்க வைத்தியசாலையிருக்கும் முருக்கடி வட்டாரத்துக்கே கொண்டுசெல்ல விரும்பினராயினும் தூக்கிச் செல்லச் செல்லப் பேழையின் பாரம் அதிகரிப்பதை உணர்ந்த மக்கள் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இன்று கண்ணகி அம்மன் அமர்ந்துள்ள இடத்தில் ஒரு பழம்பெரும் பூவரசமரத்தின் கீழ்ப் பேழையை வைத்துவிட்டு நாற்புறமும் சூழ்ந்திருந்து சிலர் பஜனை செய்பலாயினர் இன்னுஞ் சிலர் தியானத்தில் அமர்ந்தனர்.! மற்றுஞ்சிலர் இதுவே கண்ணகி கோயில் கொள்ள உவந்த இடம்என்று மெதுவாகப் பேசிக்கொண்டனர். மற்றுஞ் சிலர் ஆனந்த மிகுதியினால் "கோயிற்காடு கேயிற் ாடு" என்று கூத்தாடத் தொடங்கினர்.

### கோவில் எழுந்தது

கண்ணகி விரும்பியமர்ந்த இடத்தில் புதிய கோவில் எழுந்தது திருவிழாவும் நிகழ்ந்து வரலாயிற்று. வைகாசி விசாகப் பொங்கல் வெகுவிமரிசையாக நடக்கிறது.

ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளின் முன் ஒரு மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. வணக்கத்துக்குரிய குருதேவர் சிவஸ்ரீ மு. சோமாஸ்கந்த குரு அவர்கள் தலைமையில் அந்தக் கும்பாபிஷேகம் நன்கு நடைபெற்றது. கண்ணகியம்பாளை வழிபட சிவாகமபத்ததிகளோ மந்திரங்களோ இல்லாமையால் ஆதிசக்தியாகிய ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாளை மூலத்தானத்தில் அமர்த்தினர்.

**மலர் ஏற்பாடு:**
**மு. கனகசபாபதி**

கண்ணகியம்மன் இன்றமர்ந்துள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். திருக்கேதீச்சரத்தில் கௌரியம்மன் தென்திசை நோக்கி நின்று அருள்புரிவதுபோல் திருமாபத்தினி ஆகிய கண்ணகி அம்பாளும்தென்முகமாக அமர்ந்து கருணைபுரிகின்றார் இரண்டாவது மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ வை. மு. வைரவநாதக் குருக்கள் தலைமையில் நிகழ்ந்தது, மூன்றாவது மகா கும்பாபிஷேகம் நடைபெறுமுன் அம்பாள் ஆலயம் உயர் திரு. மு. முத்தையாபிள்ளை அவர்களால் புதிதாக அமைக்கப்பெற்றது. அதற்குச் சில ஆண்டுகளின் முன்னர் ஆலயத்தின் தென் புறத்தில் 'பராசக்தி தீர்த்தம்' என்ற புத்தகம் புதிய திருக்குளமொன்று உயர்திரு இ. க. கந்தையா அவர்களால் அமைக்கப்பெற்றது. தீர்த்தம் எடுக்கவும், தெப்பத் திருவிழா செய்யவும் ஏற்றதாக அத் திருக்குளம் அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டில் உயர்திரு. மு. முத்தையாப் பிள்ளை அவர்களின் பெரு முயற்சியினாலும் ஏனைய பஞ்சாயத்தார், பரிபாலன சபையாரின் விடாமுயற்சியினாலும் ஒரு பெரும் மகா கும்பாபிஷேகம் எம் குருதேவர் சிவஸ்ரீ வை.மு. குமாரசுவாசமிக்குருக்கள்அவர்களின் தலைமையில் பக்திமணங் கமழ நிகழ்த்தப்பட்டது.

### அம்பிகை தந்த செல்வம் 'அரும்பணிக்குரியது'

கண்ணகி அம்மாள் ஆலயம் பலவழிகளிலும் முன்னேற்றம் அடையலாயிற்று புதியபஞ்சாயம் அமைப்பதற்குத் தொண்டர்கள் முயன்றனர். வெற்றியும் கண்டனர். இன்று இராஜகோபுரம் வரனளாவி நிற்பதன் காரணம் புதிய பஞ்சாயத்தினரின் தியாக சிந்தனையென்றே கூறலாம் சிறப்பாக 'திருப்பணி வேந்தன்' திரு. நா. க. மயில்வாகனம் அவர்களும் சிவநெறிச் செல்வர் திரு. கு. செல்லையா அவர்

**நல்லையன்**

களும் பஞ்சாயத்தில் முன்னின்றுழைக்கின்றனர். அம்பிகை தந்த செல்வம் அரும் பணிக்குரியது. என்றே அல்லும் பகலும் செலவு செய்கின்றனர். பெருநிதிக்கிழார் அமரர் மு. முத்தையா பிள்ளையின் மக்களும் ஆலயப் பணியில் பேராவாக்கொண்டுள்ளனர். இன்னும் இன்று அம்பாளின் அருளால் அயராது உழைத்து முன்னேறும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புரியும் ஆலயப்பணியை அளவிடமுடியாது. தேர்த் திருப்பணிக்குழுவில் முன்னின்று உழைக்கும் அன்பர்கள் பணி அளவிடற்கரிய பெரும்பணி. வயோதிப வேளையிலும் சிவநெறிக்காவலர். திரு. சி, முத்துக்குமாரு அவர்கள் புரியும் பணி என்னென்று வியப்பேன்! அவருடன் அன்பர் திரு. த. கிருஷ்ணசாமியும், நண்பர் ஆசிரியர் சு. க. கண்ணையா அவர்களும் இன்னும் பலரும் இடையறாது முயன்றதினால் எழுந்து நிற்கின்றது, புத்தம் புதிய வண்ணச் சித்திரவழகுத் தேர்! தேர்எழுந்தது [illegible] னைக் காக்கும் தேர் முட்டியும் எழுந்துவிட்டது ★

### புங்குடுதீவின் புகழ்


புங்குடுதீவு ஒரு தெய்வீக விளைநிலம்' என்று தமிழ் நாட்டுச் சைவச் சான்றோர் ஒருவர் ஒருமுறை குறிப்பிட்டார். அவ்வுரை மெய்யுரையே ஏறக்குறைய இருபதினாயிரம் மக்களை அடக்கிய பதினைந்து சதுரமைல் பரப்புக்கொண்டுள்ள எமது தீவகத்தில் தேரோடுங் கோவில்கள் பன்னிரண்டுக்கு மேற்பட்டவை! எங்கே பார்த்தாலும் ஒரு கோவில் புத்தம் புதிய பொலிவுடன் காட்சிதரும். கற்றுணர்ந்த சான்றோர்களும் உழைப்பினால் உயர்ந்த உத்தமர்களும் பக்திநெறி கண்டறிந்த மக்கள் பலரும் நிறைந்த ஊர் புங்குடுதீவு என்றால் அது புனைந்துரையாகாது. ★

### கற்பால் தெய்வமாகிய கண்ணகி

கண்ணகி ஆதிபராசக்தியின் ஓர் அம்சம் கண்ணகி மனிதகுலப் பெண்; கற்பின் உயர்வினால் அவள் தெய்வமானவள்!

"கற்புக்கடம் பூண்ட
இத்தெய்வமல்ல
பொற்புடைத் தெய்வம்
யாம் கண்டிலம்

என்பது சிலப்பதிகார மகாகாவியம் இயற்றிய இளங்கோ அடிகளாரின் வாக்கு ★



ஆதியில் புங்குடுதீவு தென்பகுதிக் கடலில் கரை ஒதுங்கிய கண்ணகை அம்மன் சிலை

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே!

வடபகுதியின் முன்னைய, இன்றைய முன்னணி நூல் வியாபாரிகளும்,
அன்பளிப்பு கோல்ட் கவறிங், விளையாட்டுப் பொருட்களுக்கும்

**அம்பிகாபதி**
**★ பான்ஸி கூட்ஸ் ★**
66, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வேண்டும் வரம் தந்தருளும் நாயகியே!
உன்தாள் பரவசமாய்ப் பணிந்திடுவோம்!

★ அல்மேனியம், பிளாஸ்ரிக்
★ வார்ப்பு கண்ணாடிப் பொருட்களையும்,
★ பாக்ஸ், மணிக்கூடு, விளையாட்டுப் பொருட்களையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

**★ ராஜா ரேட் சென்ரர் ★**
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

முத்து, நவரத்தின மிசைத்த மணித் தேரேறி முது வீதி வாரு மன்னையே!

★ இந்த வெப்ப காலத்தில் நினைவுக்கு வரவேண்டிய இடம்
★ உங்கள் இனிமைக்கும், சுவைக்கும் மெருகூட்டுபவர்கள்,

**★ லிங்கம் கூல்பார் அன் கோப்பி பார் ★**
[வெலிங்டன் சந்தி]
52. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எழில்வாரிப் புங்கை நகர் வந்த கண்ணகிச் செல்வி இராஜ இராஜேஸ்வரியே!

சகலவிதமான அழகுசாதன - அன்பளிப்பு வாசனைப் பொருட்களையும், வீடுகளை அழகுபடுத்த காட்சிக்கு வைக்கும் நவீனரக காட்சிப் பொருட்களுக்கும்

**★ அம்பிகாபதி ★**
**பான்ஸி ரேடர்ஸ்**
9 A, நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்.

கோமே தகமே குளிர்வான் நிலவே சூழல்வாய்
மொழியே வருவாய் அருள் தருவாய்!

↓

புங்கைநகர் கண்ணகை எனும் இராஜராஜேஸ்வரி
அம்பாள் ரதமேறித் திருவிழா வருக வேண்டி நிற்கும்

**ஓர் அம்பிகை அடியார்**

முத்தே வரும் முத்தொழிலாற்றிடவே
முன்னின் றருளும் முதல்வீ சரணம்!

★ பாதணிகள்
★ அழகுசாதனப் பொருட்களை
அழகுறத் தெரிவு செய்ப எம்மை நாடுங்கள்:

**★ கௌரி ரேட் சென்ரர் ★**
5, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாய் புதுமைத் தவளே!

★ தரமான போட்டோப் பிரதிகளுக்கும்,
★ பான்ஸி கூட்ஸ்,
★ பிளாஸ்ரிக் அல்மேனியப் பொருட்களுக்கும்
● நாடி வாருங்கள்

**சுதன் ரேட் சென்ரர்**
6A, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தேர்மீதினிலே வரும் கண்ணகை அம்பிகை
மலர்பதம் போற்றி! போற்றி!!

அழகுக்கு அழகு செய்யும்
அழகிய தங்க, வைர, வெள்ளி
நகைகளைப் பெறுவதற்கு நாடுங்கள்:

**நித்தியா ஜுவல்லர்ஸ்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அன்னையே திருத்தே ரூர்ந்து
அவனியைக் காக்க வரவேண்டும்!

↓

**ஆதவன்**
**★ ரேடிங் கம்பனி ★**
11/5 (37)ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எழிலான புங்கைநகர் தென்கரையில் தங்கிவாழ் இராஜராஜேஸ்வரி அம்மையே தேரேறி வருக!

**ஹப்பி ஜுவல்லறி | HAPPY JEWELLERY**

★ தங்கப் பவுண் நகை வியாபாரம் ★

உரிமையாளர்: A. உதயகுமார்

118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

118, Kasthuriar Road,
JAFFNA.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் பட்டியலில் மாற்றம் வரும்!

கொழும்பு, மே 8

சுதந்திரக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்பிக்களில் மாற்றம் செய்யப்படவிருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

தற்போதுள்ள ஐந்து எம்பிக்களுக்கு பதிலாக வேறு புதியவர்களை நியமிக்க கட்சித் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர்மெர்வின் டி சில்வா டாக்டர் கமால் கருணாநாயக்கா, சோமசாரா தலநாயக்கா ரி.டபிள்யு. இராஜரத்தினம் எல். எ. பி. பெரேரா ஆகியோருக்கு பதிலாக ஜயா பதிரான பிரேமசிறி ஹேமதாஸ, திருமதி. நந்தா எல்லவெல. எஸ். டி. சபரமாது ஆகியோரும் மற்றொருவரும் எம்பிக்களாக நியமிக்கப்படலாம். என்று கூறப்படுகிறது. (உ-எ)

## மீளப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய 13337 நகைகள் மீளளிப்பதற்காக இங்கு கொண்டுவரப்பட்டன.

இந்த நகைகளில் யாழ் மாவட்டத்துக்குரிய நகைகளில் 316 நகைகள் இதுவரை மீளப்பெறாமல் உள்ளன.

மீளப்பெறாதவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி யாழ் பொலீஸ் நிலையத்தில் சமுகம்தந்து நகைகளை மீளப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். [இ-3]

உ

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா
பஜனை மண்டலி,
கோப்பாய்

புதிய கட்டிடத் திறப்பு விழா

கோப்பாய் அபிவிருத்திச் சபை சாரியாலயத்திற்கு அருகாமையிலுள்ள புதிய கட்டிடத்தை திரு. S. சிவஞானம் அவர்கள் (அகில இலங்கை சத்திய சாயி இணைப்புக்குழுத் தலைவர்) 09 - 05 - 90 பிற்பகல் 3 00 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.

கா. கனகசிங்கம்
அமைப்பாளர்

[13023]

WANTED TEACHER

St. Patrick's College Jaffna.

A Full - Time Teacher for English Language for Primary and Post Primary.

Apply immediately to:-

Rector

(சி-5003)

# ஜெசி தியேட்டரில் கருமபீடம்

யாழ்ப்பாணம், மே 8

முல்லைத்தீவு 'ஜெசி' தியேட்டரில் இயங்கும் மக்கள் வங்கியின் கருமபீடம் மூலம் பணப்புழக்கம் நடைபெற்று வருவதாக பிராந்திய அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்த கருமபீடம் மூலமாக அடகு நகைகளும் மீளளிக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## சிங்களப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் காத்திருக்கிறார்கள்.

இவர்களுக்கும் ஓரிரு தினங்களில் உத்தரவு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களை இடமாற்றம் செய்ய தடையாக இருந்த சில விதிகளை கடந்த ஐந்தாம் திகதியிலிருந்து பாதுகாப்பு அமைச்சு ரத்துச் செய்திருந்தது. (இ-3)

## பயிலுநர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவர்.

-இந்தத் தகவலை கல்வி துணை அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். [உ-2]

## உடனடி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது-

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் நியமனம் பெற்றவர்கள் 5 வருட சேவையை முடித்திருப்பின் யாழ் மாவட்டத்திற்கும், 4 வருட சேவையை முடித்த பின்னர் வேறுமாவட்டத்திற்கும் ஜூன் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் பெறுவார்கள்.

யாழ். மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் கோரிய அனைத்து ஆசிரியர்களும் சேவைக்காலத்தைக் கணக்கில் எடுக்காமலே ஜூன் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்படுவார்கள்.

இத்தகவல்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். (ஓ-9)

## ஈழம் --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ணய சபையின் கூட்டம் மே 7-ஆம் திகதி நடைபெறும் என்று மார்ச் முதலாம் திகதி நடைபெற்ற வடக்கு- கிழக்கு மாகாணசபையின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் ஸ்ரீலங்கா அரசானது தமிழ்பேசும் மக்களின் நலன் கருதி முன்வைக்கப்பட்ட 19 அம்சக்கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாயின் ஈழப் பிரகடனத்தை மீளாய்வு செய்வது என்றும் நாம் முன்பு தெரிவித்திருந்தோம்.

இன்று ஸ்ரீலங்கா அரசானது நாம் முன்வைத்த 19 அம்சக் கோரிக்கை ஒருபுறமிருக்க எதுவித முன்நிபந்தனையுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளது.

எமது கோரிக்கைகளில் ஒன்றான இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை மூடவேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறியுள்ளதைத் தொடர்ந்து ஏழாம் திகதி கூடவிருந்த அரசியல் நிர்ணசபைக் கூட்டத்தைக் காலவரையறையின்றி ஒத்திவைக்க முடிவு செய்துள்ளோம்.

தொடர்ந்தும் இப்பேச்சுவார்த்தைமூலம் 19 அம்சக் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் எமதுஈழக் கோரிக்கையை முன்பு கூறியதுபோல நடைமுறைப்படுத்துவோம்—பொன். ராம் ராஜகாரியர், தலைவர், வடக்கு கிழக்கு மாகாணசபை — இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. [ஓ-2-3]

## தம்பிமுத்து---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைநாட்ட முழு மனத்துடன் செயற்படும் எம்மை இக்கொலை வெறியரிடமிருந்து பாதுகாக்க அரசு தவறும் பட்சத்தில் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

அரசு இவ்விடயத்தில் மேலும் சண்மூடித்தனமாக நடந்து கொண்டால் வடக்கு -கிழக்குமட்டுமல்ல, கொழும்பிலும் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழிகள் ஏதும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

எனினும் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதனாலேயே நாம் இன்னும் அரசின் பாதுகாப்பைக் கோரவேண்டியிருக்கிறது.

சுட்டுக்கொல்லப்பட்ட சாம் தம்பிமுத்து ஆயுதம் ஏந்திய ஒரு போராளி அல்லர். அவர் ஜனநாயக வழிமுறையில் வந்தவர்.

கொலைவெறியர்கள் எம்மைக் கொலை செய்வதற்காக கொழும்பில் உலாவுவதாக எமக்கு நண்பர்கள் மூலம் இரண்டு நாட்களுக்கு முன்னர் தகவல்கள் கிடைத்தன. ஆனால் பாதுகாப்பு அமைச்சினால் எமக்கு உத்தியோகபூர்வ அறிவிப்போ, தகவலோ தரப்படவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும்.

இந்த விடயம் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிந்திருந்தும் எமக்கு பாதுகாப்புத் தர நடவடிக்கை எடுக்காதது அரசின் பெரும் தவறாகும் —இப்படி அவர் தெரிவித்துள்ளார். (உ-2-9)

## பருத்தித்துறை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டித் தாக்கம் இல்லாது போயிற்று. எனினும் பல இடங்களிலும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. (அ)

## சாம் தம்பி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததாகக் கூறப்படும் மூன்று இனந்தெரியாத இளைஞர்கள் அவரையும் அவரது மனைவியையும் நோக்கித் திடீரென வேட்டுக்களைத் தீர்த்தனர்.

சூட்டுச் சம்பவத்தை அடுத்து அவர்கள் மூவரும் மோட்டார்சைக்கிளிலேயே தப்பிச் சென்றதாகவும்கூறப்பட்டது.

திரு. சாம் தம்பிமுத்துவுக்கு கலையில் ஒரு காயமும் மார்பில் இரண்டு காயங்களும் ஏற்பட்டன. சூடுபட்ட சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது.

படுகாயமுற்ற திருமதி தம்பிமுத்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற போது தம்பிமுத்து தம்பதியருடன் அவர்களது கார்ச் சாரதி மட்டுமே இருந்தார் என்றும் —

வேறு மெய்ப்பாதுகாவலர்கள் யாரும் இருக்கவில்லை என்றும்—

இந்தச் சம்பவத்தில் கார்ச் சாரதி காயம் ஏதுமின்றித் தப்பினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பின்னர் மீட்கப்பட்டதாக ஏஜென்ஸிச்செய்தி ஒன்று தெரிவித்தது.

உயிரிழந்த சாம் தம்பிமுத்துவுக்கு வயது 57. அவரது மனைவிக்கு 48 வயது.

தம்பிமுத்துவின் சடலம் நேற்று மாலை மரணவிசாரணைகளுக்காக கொழும்பு ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. [உ-எ-2]

# தேசிய வீரர் தினத்தை முன்னிட்டு கட்டுரை - பேச்சுப் போட்டிகள்

## பாடசாலை மாணவரிடையே நடத்தப்படும்

யாழ்ப்பாணம், ஏப் 8

தேசிய வீரர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சு, கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மாணவர்களுக்கிடையே கட்டுரை - பேச்சுப் போட்டிகளை நடத்த உள்ளது.

இப் போட்டிகள் முதலில் கோட்டக் கல்வி பிரிவு ரீதியாக நடத்தப்படும்.

இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் மாகாண ரீதியில் நடைபெறும் போட்டிகளிலும் பின்னர் அகில இலங்கை ரீதியிலான போட்டிகளிலும் கலந்துகொள்வார்கள்,

போட்டிகள் தமிழ், சிங்கள, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

மாகாண மட்டத்தில் தெரிவாவோருக்கு சான்றிதழ்களுடன் புத்தகப் பொதிகளும் பரிசாக வழங்கப்படும்.

கனிஷ்ட பிரிவில் தெரிவாவோருக்கு 1, 2, 3 ஆம் பரிசுகளாக முறையே 1000 ரூபா 750 ரூபா 500 ரூபாவும், சிரேஷ்ட பிரிவில் தெரிவாவோருக்கு முறையே 1500 ரூபா, 1000 ரூபா, 750 ரூபாவும் வழங்கப்படும். கனிஷ்ட பிரிவில் ஆண்டு 6 முதல் 8 வரையும், சிரேஷ்ட பிரிவில் ஆண்டு 9 முதல் 13 வரையும் கல்வி கற்போர் போட்டிகளில் பங்கு பற்றலாம்.

இவை கோட்டம் ரீதியிலும், மாகாண ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் பரிசளிக்கப்பட்டு மே 22 ஆம் திகதி கொழும்பில் ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெறு விழாவில் பரிசு வழங்கப்படும். (இ-9)

# மார்ச்சுக்குப் பின் நியமனமான மூவரும் வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், மே 8

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் கடந்த மார்ச் மாதத்துக்கு பின் யாழ். செயலகத்துக்கு நியமனம் வழங்கப்பட்ட மூவரையும் வேலைநீக்கம் செய்யும் உத்தரவை மாகாணசபை வழங்கியுள்ளது.

இந்த மூவருக்கும் மார்ச் மாதம்வரை சம்பளம் வழங்கும்படியும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

# பட்டமளிக்கும் விடயத்தில் பல்கலைக்கழகம் மோசடி?

## ஆணைக்குழு விசாரணை நடத்தும்

கொழும்பு மே 8

பட்டப்பின் படிப்பில் பட்டம் வழங்கும் விடயத்தில் பல்கலைக்கழகம் ஒன்றில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மோசடிக் குற்றச்சாட்டு பற்றி பல்கலைக் கழகமானிய ஆணைக்குழு விசாரிக்க இருப்பதாகத் தெரிகிறது.

கலைத்துறையில் இடம் பெறுவதாகக் கூறப்படும் இம்மோசடியில் பணம் கொடுப்பவர்களுக்குக் கூடுதல் புள்ளிகள் வழங்கப்படுகிறதாம்.

ஆணைக் குழுவுக்குக் கிடைத்த முறைப்பாட்டில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கணபதி சின்னத்துரை

(கோப்பாய் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க ஊழியர்)

தோற்றம்:- 26-05-1942  மறைவு:- 08-04-1990

ஊரெழு மேற்கில் கணபதிக்கும் இளையபிள்ளைக்கும் புத்திரனாகத் தோன்றிய திரு.சின்னத்துரை அவர்கள் அமரத்துவம் எய்தியதை எண்ணி மிகுந்த துயரத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.  (3521)

## 100ஆம் ஆண்டு பிறந்த தின ஆராதனை



அமரர்

திரு. சுவாமிநாதர் கந்தையா

தோற்றம்: 08 - 05 - 1890  மறைவு: 25 - 07 - 1976

அன்னாரை அன்புடன் நினைவு கூரும் அவரது

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

235, பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.  [12369]



பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்



பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



போட்டி விதிகள்

1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - கவசாக்கி பஜாஜ் கே.பி.K.B. 100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்

69, அமிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி : 549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

JWT SP 20729


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!
★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குளிரூட்டி பிரேதம் இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்
பிறைற் ஹவுஸ்
(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

08 - 05 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!
தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவு வாடகைக்கு பெற
பிறைற் ஹவுஸ்
(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



ஈரோஸின் வெகுஜன அமைப்பான ஈழவர் ஜனநாயக முன்னணி நடத்திய மேதினக் கூட்டத்தில் பங்குபற்றிய மக்களில் ஒருபகுதியினரை முதலாவது படத்திலும், ஈழவர் ஜனநாயக முன்னணியின் எம். பி. யான திரு. இராமலிங்கம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஒ)

## இந்தியப் பிரசைகள் விடயம்;
## இந்தியா பேச்சு நடத்தத் தயார்!

### வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, மே 8

இலங்கையில் இருந்து இந்தியப் பிரசைகளை திருப்பி அழைப்பது தொடர்பாக பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்திருக்கிறது.

ஆனால் அந்தப் பேச்சுக்களில் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதும் சம்பந்தப்பட்டிருக்கும் என்று புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார் என்று 'இந்து' செய்தி வெளியிட்டிருக்கிறது.

''சர்வதேசக் கட்டுப்பாடுகளை எப்பொழுதும் இந்தியா கௌரவித்தே வந்திருக்கிறது

''இலங்கை அமைச்சர், 1987 இல் செய்துகொள்ளப்பட்ட இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியப் பிரசைகள் தாயகம் திரும்பவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே ஒப்பந்தத்தில் தான் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளும் சமகாலத்தில் இலங்கைக்குத் திரும்பவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது

இந்த அம்சம் குறித்து செயல்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பது பற்றி பேச்சுக்கள் நடத்த நாம் மகிழ்ச்சியுடன் இருக்கின்றோம்

இலங்கையில் ஒரு லட்சம் இந்தியப் பிரசைகள் இருப்பது போல, இந்தியாவிலும் ஒருலட்சம் வரை இலங்கைப் பிரசைகளும் உள்ளனர் என்பதும் தெரிந்த விஷயம்.

இவ்விஷயம் மனிதர்களுடன் சம்பந்தப்பட்டது; வெறும் எண்ணிக்கையுடன் சம்பந்தப்பட்டது அல்ல.

இருதரப்பினரும் இவர்களைத் திருப்பி அழைப்பது என்பது, ஆகக்குறைந்த கஷ்டத்தை அவர்களுக்கு ஏற்படுத்துவதாக அமையவேண்டும். அப்படி திருப்பி அழைக்கப்படும் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளும் ஒழுங்கு செய்யப்பட வேண்டியுள்ளது.''

—இப்படி புதுடில்லிப் பேச்சாளர் சொன்னார். (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கனகசபை

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மலேசியன் பென்சனியர் செல்லையா கனகசபை 4 5 1990 இல் காலமானார்.

அன்னார் தெய்வானைக்கண்டுவின் அன்புக்கணவரும், சபாரத்தினம் (திருச்சி) புஷ்பராஜமணி, நவரத்தினம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதேவி, குமாரசாமி (இளைப்பாறிய கணக்காளர் சீமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை). மங்களேஸ்வரி (சென்னை) குமரகுரு (உணவுப் பரிசோதகர் மநரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பஞ்சளா, ராதிகா (Denmark). சுகிர்தா. செல்வகுமார் (Canada). ஜெகதா. கயாவினி, ரஞ்சினி (Newzealand), பத்மினி (U.K). ரவீந்திரன் Greec ) இராஜேந்திரன் (Newzealand), மகேந்திரன் (Newzealand), சுரேந்திரன் (Peradeniya university). உஷாயினி, வாசுகி, குமரன். தேவதி, பிரபாகரன் (France). நளாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சின்னக்கண்டு இராசதுரையின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5. 5 1990 இல் ஊரிக்காடு மயானத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார். உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. நவரத்தினம்,

சரோஜினி பவனம்,
ஆலடி
வல்வெட்டித்துறை.

(13045)

### திருமதி சிவாஜினி அகஸ்டீன்

திருமதி சிவாஜினி அகஸ்டீன் 05-05-1990 இல் கனடாவில் காலமானார்.

இவர் அகஸ்டீனின் (கனடா) அன்பு மனைவியும், ஜெரமியின் அன்புத் தாயாரும், கிருஷ்ணபிள்ளை (இளைப்பாறிய சிறாப்பர்- Mercantile Bank, Colombo), திருமதி பமேஸ்வரி கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற Dr யோகநாதன், ஜெயநாதன் (கனடா). சரோஜா (கனடா), சிவபாதசுந்தரி, சிவகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மினி (கனடா), சகாநந்தன் (கனடா). தவரட்ணம் (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்). உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற V. C. கனகரட்ணம் (இளைப்பாறிய சமநல சேவை உதவி ஆணையாளர்), திருமதி மீனா கனகரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புப் பெறா மகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை 07-05-1990 இல் கனடாவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. T. தவரட்ணம்
(மைத்துனர்)

31, ஓட்டுமட வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[13180]

### வெள்ளியன்று பாடசாலைகள் ஒரு மணியுடன்

யாழ்ப்பாணம், மே 8

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், அமரருமான டி. எஸ். கே. வனசிங்காவின் அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுவதையொட்டி யாழ் மாவட்டப் பாடசாலைகளை பகல் ஒரு மணியுடன் மூடும்படி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பணிப்புரை வழங்கியுள்ளார்.

யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஆசிரியர்கள் பங்குபற்ற வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ 9-3]

### கடுங்காற்றில் சிக்குண்டு
## பருத்தித்துறையில் ஒதுங்கிய நான்கு இந்திய மீனவர்கள்

யாழ்ப்பாணம், மே, 8

வங்காளவிரிகுடாப் பகுதியில் வீசிய கடுங்காற்றினால் அள்ளுண்டு தமிழ் நாட்டின் நாகபட்டினத்தைச் சேர்ந்த படகு ஒன்று 4 மீனவர்களுடன் நேற்று பருத்தித்துறைப் பகுதியில் கரையொதுங்கியது.

படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை அடுத்து படகு நடுக்கடலில் நிறுத்தப்பட்டதாகவும் பின்னர் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றின் காரணமாக அது பருத்தித்துறை கரைக்கு அள்ளுண்டு வந்து கரை ஒதுங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கரைஒதுங்கிய மீனவர்களை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்று உபசரித்து தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு நாகபட்டினத்திலிருந்து புறப்பட்ட இந்த நான்கு மீனவர்களும் 48 மணிநேரம் கடலில் தத்தளித்து அலைந்த பின்னர் நேற்றுப்பிற்பகலிலேயே பருத்தித்துறை பகுதியில் கரை ஒதுங்கினர்.

செல்வராஜா பழனிவேல் (வயது 25), சுப்பிரமணியம் அஞ்சப்பன் (வயது 20), பக்கிரிசாமி (வயது 24), கௌரிராஜன் செல்வக்குமார் (வயது 26) ஆகிய நால்வருமே கரை ஒதுங்கிய மீனவர்கள் ஆவர். (உ-9)

### வல்லை முத்துமாரி உற்சவம்:
## நாளை இந்திரவிழா வல்வை கோலாகலம்

வல்வெட்டித்துறை மே 8

நாளை புதன்கிழமை வல்வெட்டித்துறைப் பகுதியில் இந்திர விழா நடக்கவுள்ளது.

ஊறணித் தீர்த்தோற்சவத்தை முடித்துக்கொண்டு நெடியகாடு பிள்ளையார் கோயிலுக்கு வரும் வல்வை முத்துமாரியம்மனின் வருகையையொட்டிய இந்திர விழாவைக் கொண்டாட இப்பிரதேசமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஊறணியிலிருந்து ஊரிக்காடு வரை உள்ள பாதை வர்ண மின்விளக்குகளாலும் அலங்கார வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன. முக்கிய சந்திகளில் ஏககாலத்தில் பல இசைக்கலைஞர்களது நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் இருந்து 2 மைல் தூரம் வாழைமரங்களால் அலங்காரம் செய்யப்பட்டு வருகிறது.

வாணவேடிக்கைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

வர்ணப் புகைக்கும் வேடிக்கைக்குண்டுகளும் 50-100 அடி உயரமான இராட்சத புகைக் குண்டுகளும் வான்நோக்கி செலுத்தப்படத் தயாராக உள்ளன

புகைக்குண்டுகளை (புகைக்கும் பலூன்கள்) வானோக்கி அனுப்புதல் இவ் விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாகும். இரவு ''சுப்பர் சித்தாரா'' குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும். (ஒ-ப-160)

## நிர்வாக சேவைப் பதவிக்கு தெரிவானால் 10 வருடசேவை

யாழ்ப்பாணம். மே 8

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிர்வாகசேவை உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தொடர்ந்து 10 வருடகாலம் வடக்கு - கிழக்கு மாகாணசபையில் கடமையாற்றவேண்டும். அவ்வாறு தொடர்ந்து 10 வருடங்கள் கடமை செய்யாவிடின் அவர்களது சேவை நிறுத்தப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அடுத்தமாதம் 23ஆம் திகதி நடைபெறும் நிர்வாக சேவை உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கு (வகுப்பு 11, தரம் 11) தோற்றுபவர்களுக்கே மேற்கண்ட கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக உத்தியோகத்தர் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் நடத்தப்படும் இந்த விசேட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை கொழும்பில் அடுத்தமாதம் 23ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

விசேட பரீட்சை திறந்த போட்டிப் பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை என்று இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் அரசாங்க ஊழியர்கள் 10 வருடம் சேவையைப் பூர்த்திசெய்து இருக்கவேண்டும் என்றும் —

அரச சேவையில் இல்லாத பட்டதாரிகள் 22-30 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தால் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3-167)

### 15 லட்சம் வீடமைப்புக் கடன்:
## விண்ணப்பப் படிவங்கள் நேற்று முதல் விநியோகம்

கோப்பாய், மே 8

நல்லூர், சாவகச்சேரி, மருதங்கேணி, பருத்தித்துறை கரவெட்டி, கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக்கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

விண்ணப்பபடிவத்தைப் பெற விரும்புவோர் 18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவராகவும் மாதாந்த வருமானம் 2400 க்கு உட்பட்டவராகவும் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் கடன் பெறாதவராகவும் இருக்கவேண்டும்.

இவ்விண்ணப்ப படிவங்களை 23 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளமுடியும். 30 ஆம் திகதிக்கு முன் படிவத்தை பூரணப்படுத்தி வீடமைப்பு அதிகாரியிடம் கையளிக்க வேண்டும். (இ72)

### தென்மராட்சியில் ஆறாவது கல்வி கோட்டம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ் மாவட்டத்தின் ஆறாவது கல்விக் கோட்டமாக தென்மராட்சி கோட்டம் இயங்க மாகாண சபையின் கல்விச் செயலாளர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இக் கோட்டம் இம் மாத இறுதியில் இருந்து இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கல்வி அதிகாரியாகக் கடமை புரியும் திரு. எஸ். தனஞ்செயன் இந்த கோட்டத்துக்கு உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுவார். (ஒ-3)

### முல்லைத்தீவில் கடும் காற்றும் மழையும்

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவு, தண்ணிரூற்று, முள்ளியவளை மற்றும் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நேற்று நண்பகல் வரை பலத்த மழை பெய்தது.

வீதிகள், வயல்கள் வெள்ளத்தால் நிரம்பியுள்ளன. முல்லைத்தீவு — செல்வபுரம் வீதியிலுள்ள சின்னாற்றுப் பாலமும் மழை நீரினால் நிரம்பியுள்ளது.

அத்தோடு பலத்த காற்றும் வீசிக்கொண்டிருக்கிறது சூறாவளி தாக்குமோ என்று மக்கள் அஞ்சிய வண்ணம் உள்ளனர். (ஒ-29)

### ஊரியில் இறால் வளர்ப்புத் திட்டம்

யாழ்ப்பாணம் மே 8

காரைநகர், ஊரியில், ஊரி நல்லொழுக்க வாலிபர் சங்கத்தின் ஊடாக பெரிய அளவில் இறால் வளர்ப்பை மேற்கொள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

இப்பகுதியில் திரு. ஐ. பரமு என்பவரது முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இறால் வளர்ப்புத் திட்டம் வெற்றி அளித்துள்ளதை அடுத்தே இதனை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பரீட்சார்த்த இறால் வளர்ப்பின் போது 5 கிராம் நிறை 105 நாட்களின் பின் 45 முதல் 49 கிராமாக உயர்ந்தது. இறால் அறுவடையின் போது போரூட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. தேவதாஸ், றூட் நிறுவனத்தைச் சேர்ந்த ரவி, அல்பேர்ட் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். [இ]

### விமான சேவை நேற்று இல்லை

யாழ்ப்பாணம், மே 8

காலநிலை சீரின்மையால் நேற்று கொழும்பு-யாழ்ப்பாணம் விமானசேவை நடைபெறவில்லை [ஒ-3]

### சம்பளம் உயர்வு

சென்னை, மே 8

தமிழ் நாட்டில் முதலமைச்சர், அமைச்சர்கள் மாற்றும் எம். எல். ஏக்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டன.

## யாழ். ஆஸ்பத்திரியில் 2 ஆவது 'எய்ட்ஸ்' நோயாளி

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் 37வயது நபர் ஒருவருக்கு ''எய்ட்ஸ்'' நோய் இருப்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து அந்த நோயாளி ஆஸ்பத்திரியில் தனி அறை ஒன்றுக்கு இடம் மாற்றப்பட்டார்.

பிரஸ்தாப நோயாளரின் நிலை குறித்து கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் ''எய்ட்ஸ்'' நோய்க்குஆளானவர் என்று கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது நபர் இவர் என்று ஆஸபத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன-

சம்பந்தப்பட்ட நபர் உகண்டா நாட்டில் வசித்தவர் என்றும் ஏற்கனவே யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர் என்றும் அறியவருகிறது. (அ-3)

## மரண அறிவித்தல்

### இராஜரத்தினம் சௌந்தரலிங்கம்
ஆலை முகாமையாளர் [விநியோகம், போக்குவரத்து]
கடதாசி கூட்டுத்தாபனம், வாழைச்சேனை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. இராஜரத்தினம் சௌந்தரலிங்கம் காலமானார்.

இவர் காலம்சென்ற இராஜரத்தினம், செல்லக்கண்ணுவின் அன்பு மகனும், சிவபாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும். செல்வி உஷா (முகாமைப் பயிலுனர், கச்சேரி, திருகோணமலை), இலிங்கேஸ்வரன் (லண்டன்), வீரமரணம் அடைந்த கிரிதரன் (ரவிராஜ்) அவர்களின் அன்புத் தந்தையும், காலம்சென்ற பஞ்சலிங்கம், யசோதரலிங்கம், விமலாதேவி, சொக்கநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம்சென்ற சிறிஸ்கந்தராஜா, ஆனந்தராஜா, திலகவதி (மலேஷியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 09-05-1990 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்வண்ணம் வேண்டுகிறோம்.

தகவல்:
செல்வி உஷா சௌந்தரலிங்கம்

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில்.

[13121]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org